# கலைச் செல்வி



ஏப்ரல் - மே 1960 விலை சதம் 25

# மக்கள் வைத்தியசாலை

**கே. கே. எஸ். வீதி, சுன்னகம்.**

ஸ்தாபிதம் 28-11-58

மக்கள் நன்மையையும், வசதியையும். சுகாதார வாழ்க்
கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த
வைத்தியசாலை இதுவே

திநந்தோறும் திறக்கப்படும் நேரம்
காலை 7-30 தொடக்கம் மாலை 9 மணி வரை

உயர்தர சிகிச்சை பெற உதவுமிடம்
மக்கள் வைத்தியசாலையே.

WE POSSESS ALL LATEST PATENT
MSDICINES FOR SALE

SERVICE AVAILABLE DAY AND NIGHT
OUR MOTTO IS SERVICE

# PEOPLE'S DISPENSARY

## CHUNNAKAM

(MANAGING PROPRIETOR : MR. K. S. KANDIAH)

போன்: 281

தந்தி: "ஜுவெல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்
அழகிற் சிறந்த ஆபரணங்கள்

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில்
இணையற்ற ஸ்தாபனம்

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

நம்பிக்கை! நாணயம்! நயம்!
உத்தரவாதம்!

பெற்ற நகைகளை 32 வருடங்களாகச் செய்தளித்து
அமோக ஆதரவுபெற்ற

இலங்கை இந்தியாவின்
மிகப்பெரிய நகை வைர வியாபாரிகள்

# எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்

அழகிய அச்சு வேலைகள்
றப்பர் ஸ்ராம்புகள்
பிளாஸ்டிக் போட்டோக்கள்

பாடசாலை - வாசிகசாலை

முதலியவைகளுக்குத் தேவையான சகலவித புத்தகங்கள், உபகரணங்கள் ஸ்ரேசனறிச் சாமான்கள் முதலியன
கிடைக்குமிடம்:-

தந்தி: பிறின்ரேஸ் தொலைபேசி 517 (தொடர்புகள் 3)

விவேகானந்த அச்சகம்
புத்தகசாலை

விவேகானந்தாக் கட்டிடம்
யாழ்ப்பாணம்

**

கிளை:-
230, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு
தபாற்பெட்டி: 853

தந்தி: விவேபிறஸ் தொலைபேசி: 79260

ஏ.
கே.
எஸ்.
அன்
ச
ன்
ஸ்

போன்.
519
*
உங்கள்
அபிமானத்திற்கும்
அன்பிற்கும்
உரிய
நகை
வைர வியாபாரிகள்

நகை மாளிகை

63, 65, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்

# வாசகர் வாய்மொழி

**கண்ணீர் பிறந்த கதை.**

'வாழ்வளித்த தெய்வம்' 'அன்பு வென்றது' ஆகிய கதைகளைச் சென்ற இதழில் படித்தேன். கண்ணீர் வந்துவிட்டது.

வெள்ளவத்தை -கே. சகுந்தலாதேவி

**மெலிவுப் பதிப்பு.**

கலைச்செல்வியின் விலையைக் குறைத்தீர்கள், மகிழ்ந்தோம். பக்கங்களின் தொகையையும் குறைக்கச் சொன்னோமா? பக்கங்களைக் கூட்டுங்கள். பணம் அதிகமானாலும் பரவாயில்லை.

வவனியா. ச. கந்தசாமி

**"கட் கட்"**

'பட் பட்' பகுதியில், பெண்களைக் கேலி செய்யும் கேள்விகட்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இது உங்களுக்கே நல்லாயிருக்கா ஸார்?... இப்படியான கேள்விகளை நீக்கிவிடுங்கள்.

காரைநகர் மணி

**படபடப்பு!**

சுளை சுளையாக நான்கு ரூபா வாங்கும் தாங்கள் கதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் ஏன் படம் போடக்கூடாது? நல்ல சித்திரக் கலைஞர்கள் இங்கு இல்லையா?

திருக்கோணமலை. கலையன்பன்

**வாசகர் (பே)பாட்டி**

...குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் எல்லோரும் பலவகையான போட்டிகள் வைக்கின்றார்கள். ஆனால் வயோதிபர்களைக் கவனிப்பவர் எவருமில்லை. நீங்கள்எங்களுக்கென ஒரு போட்டி வையுங்கள்...

புத்தூர் க. சின்னம்மா

**அட்டை எழுத்தாளர்கள்**

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகையுலகில் பல புதுமைகளைப் புகுத்திவரும் தாங்கள், தலைசிறந்த ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் படங்களை அட்டையில் வெளியிட்டுக் கௌரவிக்கலாமே!

மட்டக்களப்பு வாசகன்.

**விளக்கேற்றி வையுங்கள்**

தை இதழில் வெளியான 'விளக்கேற்றி வைத்தவன்' போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள். H. S. C. மாணவர்கட்குப் பெரிதும் பயன்படும்.

வட்டுக்கோட்டை த. குணசேகரம்

**உனக்காக, கண்ணே!**

...சண்முகத்திற்கு இனியாவது சாந்தி கொடுக்கமாட்டீர்களா? அத்தியாயத்திற்கு அத்தியாயம் அழவைத்து வேடிக்கை பார்க்கின்றீர்களே!...கல் நெஞ்சர் நீங்கள்...

மாத்தளை சரோஜனி வேலு

...தங்கள் தொடர்கதை நன்றாயிருக்கின்றது. ஆனால் பத்திரிகை ஒழுங்காகக் கிடைப்பதில்லையே...

தெஹியோவிற்றை. கச்சாயில் இரத்தினம்

---

புனைப்பெயரில் எழுதும் நேயர்கள், தங்கள் சொந்தப் பெயரையும் முழு விலாசத்தையும் கண்டிப்பாகத் தெரிவித்து விடவேண்டும்.

---

# கலைச் செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். —பாரதியார்

கலை: 2 | சார்வரி—சித்திரை 1960 ஏப்ரல்-மே | காட்சி: 4

## தேசீய இலக்கியம்

இன்று எல்லாத் துறைகளிலும் தேசீயம் பற்றிப் பேசப்படுகின்றது: அரசியலில் தேசீயம்; மொழியில் தேசீயம்; பொருளாதாரத்தில் தேசீயம்; இலக்கியத்திலும் தேசீயம்.

அந்த நாட்டவர்க்குப் பதிலாக இந்த நாட்டவர்கள் ஆட்சியை நடாத்துவது — அரசியலில் தேசீயம்.

வந்த மொழி வகித்த இடத்தை நம் சொந்த மொழி வகிப்பது — மொழியில் தேசீயம்.

மற்றவர் கால்களில் நிற்காது உற்றவர் கால்களில் நிற்பது — பொருளாதாரத்தில் தேசீயம்.

ஆனுல் இலக்கியத்தில் தேசீயம்... ?

நம் நாட்டிலுள்ளோரின் பெயர்களைக் கதாபாத்திரங்களுக்குச் சூட்டுவதாலோ, நமது மொழியைப் பேச வைப்பதாலோ, உருவத்தையும் உடையையும் மாற்றுவதாலோ தேசீய இலக்கியம் பிறந்துவிடுமா?

இவை வேண்டும்; இன்னமும் வேண்டும்.

இங்நாட்டு மக்களின் நோக்கம், ஏக்கம், இன்பக் கற்பனை இலட்சியக் கனவு, உள்ள நெகிழ்ச்சி, உணர்ச்சிப்பரப்பு, ஆகிய எல்லாம் எங்கள் இலக்கியப் படைப்புக்களில் பிரதிபலிக்க வேண்டும்; எங்கள் நாட்டு மண்ணின் வாசனை வீசவேண்டும்.

உலகத்தின் பிரதான மொழிகளில் எழுந்த இலக்கியங்கள் பல நோபல் பரிசு பெற்றுவிட்டன. தமிழிலோ சிங்களத்திலோ எந்த நூலாவது பரிசு பெற்றுள்ளதா?

அதுதான் போகட்டும்.

" உலகத்தின் இலக்கியப் படையல்கள் அனைத்தும் குவிந்திருக்கின்ற இடத்தில், யாராவது தகுதிவாய்ந்த திறனாய்வாளர்களால், ''இது இலங்கையின் இலக்கிய சிருஷ்டி' என்று பிரித்தெடுத்துப் பெருமை பாராட்டுமளவிற்காவது, தனித்தன்மையுடன், தனித்திறமையுடன், நாம் இலக்கியம் சமைக்க முடியாதா?

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். நாம் நம்பிக்கை கொண்டுவிட்டோம். நமக்கு ஏற்படும் சிறு அசௌகரியங்களினால் பத்திரிகை தாமதமானாலும், பொறுத்திருந்து படித்து ரசித்து தம் எண்ணக் கருத்துக்களை எமக்கு எழுதுவதற்கு நேயர்கள் தயாராயுள்ளனர். தமது சந்தாவைப் புதுப்பித்தும், கலைச்செல்வியை வாழ்த்தியும் எழுதிய அன்பர்கள் அனைவர்க்கும் நமது நன்றி உரியது. இனியும் உங்கள் பொறுமையைச் சோதிக்க நாம் விரும்பவில்லை அடுத்த இதழ் ஜூன் முதலாந்திகதி வெளியாகின்றது. அதையடுத்து ஒவ்வொரு மாதமும் முதலாந்திகதியன்றே கலைச்செல்வி வெளிவந்து விடுவாள்.

வெளி நாடுகளிலிருந்து வந்த சில கடிதங்களை உங்களுடன் சேர்ந்து சுவைப்பதில் மகிழ்வடைகிறோம். ''கலைச்செல்வி ஆண்டு மலரும் மார்கழி இதழும் கிடைத்தன. உங்கள் தமிழ்த் தொண்டைப் பாராட்டுகின்றேன். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' கலைச்செல்வி வாழ்க!" என்று செக்கோ சிலவகியாவிலிருந்து எழுதியுள்ளார் தமிழ் அறிஞரான டாக்டர் கமில் ஸ்வெலபில் அவர்கள். ''நான் பிறப்பால் தெலுங்கன். ஆனால் தெலுங்கன் என்று சொல்வதிலும் பார்க்க தமிழ் நெஞ்சு படைத்தவன் என்று கூறுவதில் பெருமையடைகிறேன். தமிழ்த்தேன் பிலிற்றும் நல்ல பல நூல்களைத் தொகுத்து ஓய்வு நேரங்களை ஓயாது படிப்பதில் கழிக்கிறேன். அத்தகையோனுக்குத் தங்கள் 'கலைச்செல்வி'யும் ஒரு உறுதுணையாயமைந்துவிட்டனள்" என தென்னிந்தியா கிருஷ்ணகிரியிலிருந்து அன்பர் சு. அரங்கநாதன் அவர்கள் எழுதியுள்ளார்.


மகளிர் மலருக்கென வந்த கதைகள், கட்டுரைகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. அவற்றை எழுதியோருடன் விரைவில் தொடர்பு கொள்வோம்.

இலங்கையில் சிறுகதைத் துறை வளர்ந்துள்ள அளவிற்குக் கட்டுரைத் துறை வளரவில்லை. முக்கியமாக ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதுபவர்கள் நம்மிடையே குறைவு. புதுமைப் பித்தன், கல்கி ஆகியோரைப் போல் சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை 'நாசூக்'காகக் கிண்டல் செய்து எழுதுபவர்கள் இல்லை என்றே சொல்லலாம். இந்தப் புதிய துறையில் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக ஒரு கட்டுரைப் போட்டியை நடாத்தவிருக்கின்றோம். விரங்கள் அடுத்த இதழில் வெளியாகின்றன.


வணக்கம்.

—ஆசிரியர்

# மங்கலம் என்ப மணமாட்சி



திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு அ. சுந்தரலிங்கம் அவர்களின் சகோதரர், கைதடி **திரு. அ. கணேசலிங்கம்** அவர்கள் கொல்லங்கலட்டி **செல்வி. தனலட்சுமி** அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்.



இலங்கை விற்பனவு இலாகா சாவகச்சேரிக் கிளையின் பொறுப்பாளர் **திரு. முத்துக்குமாரசாமி** அவர்கட்கும் உடுவில் திரு சு. ப. சர்மா அவர்களின் புதல்வி **செல்வி தனலட்சுமி** அவர்கட்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது,

தொடர் கதை:-

# உனக்காக கண்ணே!

— சிற்பி —

**திரும்பிப் பாருங்கள்:**

மட்டக்களப்பு பாரதி கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் பி. ஏ. சாவித்திரி என்ற சக ஆசிரியையுடன் நெருங்கிப் பழகுகின்றான். அவர்கள் தொடர்பில் யாரோ களங்கம் ... பித்து விடுகின்றார்கள் என்ற செய்தியை ஆசிரியர் பத்மநாதன் மூலம் அறிந்ததும், பயந்து கல்லூரியை விட்டுப் புறப்பட்டுக் கொழும்பை அடைகின்றான். பரமேஸ்வரன்—ரூபவதி ஆகியோரின் தொடர்பு அவனைப் புதிய மனிதனாக்குகின்றது. மட்டக்களப்பிற்குத் திரும்பிச் சென்று சாவித்திரியுடன் மனம் விட்டுப் பேசுகிறான். ஊரில் தந்தை இறந்ததால் ஏற்பட்ட கடன் பிரச்சினையையும், கல்யாணப் பிரச்சினையையும், தன் சொந்த வீட்டை விற்பதன் மூலம் தீர்க்கின்றான். அவனுடைய கவலை தீர்க்கும் மருந்தாகிய சாவித்திரியுடன் மனம் கலந்து பேசிக்கொண்டிருந்தபோது, யாரோ வெளிக்கதவில் தட்டுகின்றனர். சாவித்திரியும் சண்முகமும் வெளியே வந்து பார்த்தபோது, வெளியில் நின்ற உருவம் இருளில் மறைந்துவிட்டது. இனி, மேலே படியுங்கள்.

## 10. உண்மை விளம்பி.

அவர்களுடைய பேச்சு நின்றுவிட்டது. மனம் எதையெல்லாமோ கற்பனைபண்ணி அவர்களைப் பயமுறுத்தியது.

இந்த நட்டநடு நிசியில் கதவைத் தட்டியது யாராயிருக்கலாம்? ஒட்டுக் கேட்டுவிட்டு ஓடி மறைந்த உருவம் யாராயிருக்கலாம்?

சாவித்திரியும் சண்முகமும் தனித்தனியே தம் மனத்துள் இதே கேள்வியைத்தான் திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டனர்,

"எனக்குப் பயமாயிருக்கிறது சண்முகம். நீங்கள் இனி வெளியே செல்ல வேண்டாம். இங்கேயே தங்கி விடுங்கள்" — பயமும் தயக்கமும் அவள் குரலைக் குளறவைக்க மெல்ல மெல்ல இதைச் சொல்லி முடித்தாள் சாவித்திரி.

அலட்சியமாகச் சிரித்தான் சண்முகம். தான் ஒரு பயந்தாங்கொள்ளி என்பதைச் சாவித்திரி அறிந்துவிடக் கூடாது என்ற கவலை அவனுக்கு.

"யாரோ தெரியாதவன் வந்து கதவைத் தட்டிவிட்டான். அதற்காக நாம் ஏன் பயப்பட வேண்டும். நாம் என்ன திருட்டுக் குற்றம் செய்தோமா? கொலை செய்தோமா? யாருக்காக எதற்குப் பயப்பட வேண்டும்?"

சாவித்திரியின் பயம் எள்ளளவும் குறையவில்லை. சண்முகத்தை வெளியே செல்லவிடாது தடுப்பதற்கு இனி என்ன செய்யலாம்? அவள பார்வை இருளை ஊடுருவிச் சென்றது. அவனைத் தடுப்பதற்குரிய சாட்டு அங்கேயாவது கிடைக்குமா?

"நான் போய்வருகின்றேன் சாவித்திரி".

"கவனமாகப் போங்கள். நேராகக் கல்லூரிக்கே போங்கள். நாளை காலையில் உங்களைப் பார்க்கும் வரைக்கும் எனக்கு நிம்மதியே ஏற்படாது" என்று சொல்லி 'ரோச்லைற்' ஒன்றை கொடுத்தனுப்பினாள் சாவித்திரி.

சாவித்திரியின் வீட்டை விட்

டுப் புறப்பட்டதின் பிறகுதான் 'ஏன் வந்தோம்' என்று நினைத்தான் சண்முகம். மரங்களினூடே காற்று எழுப்பிய மெல்லொலி அவனைக் கலங்க வைத்தது. 'ரோச்லேற்' றின் ஒளியில் ...யில் நின்ற சிறு மரங்கள் ஆடிய ...து, அவன் பயத்தினுல் துள் ...குதித்தான், தன்னை யாரோ ...ன் தொடருகின்ருர்கள் என்ற பிர மையில் அடிக்கடி திரும்பிப் பார்த் ...கொண்டான். சற்றுமுன் அவன் சிரித்த அலட்சியச் சிரிப்பும், சாவித் ...க்குக் கூறிய தெம்பூட்டும் வார்த் தைகளும் அர்த்தமற்றவையாகி விட் ...ன. வேட்டியை மடித்து 'சண்டி' ...டிக் கொண்டு உயிரைக் கையில் பிடித்தபடி ஒரே ஓட்டமாக ஓடி விடு ... சாலையை அடைந்தான்.

சமையற்காரன் சண்முகத்திற் ... விழித்துக் கொண்டிருந்தான். சண்முகத்திற்குச் சாப்பிடவே பிடிக்க வில்லை. வாயில் வந்த ஏதோவோர் ...ட்டைச் சொல்லிவிட்டுப் போய் ...ட்டான். நித்திரை வருமா?

... கண்கள் உறங்கவில்லை. மனம் சிந்தனையிலிருந்து விடுபடவில்லை. ...டம்பு மட்டும் படுக்கும் பாவனை யில் கிடந்து அடிக்கொரு தடவை அங்குமிங்கும் புரண்டது.

... கதவைத் தட்டியது யார்? யாராவது கள்வனுக இருக்கலாம். சண் ...கத்திற்குப் பயமில்லை. கயவனுகவோ, காவாலியாகவோ இருக்கலாம். ...னலும் சண்முகம் கலங்க மாட் ...ன். கல்லூரியைச் சேர்ந்த யாராவது ...மாக இருந்தால்...? இப்படி ...த்துப் பார்க்கும்போதே அவன் ...நெஞ்சு துணுக்குற்றது.

... அவன் சாவித்திரியைக் காதலித்து உண்மை. அவளைக் கல்யாணம் செய்துகாலமெல்லாம் களிப்புடன்வாழ ...வண்டுமென்று மனமார விரும்பியது ...தைவிடப் பெரிய உண்மை. சினி ...ாவிலும் சிறுகதையிலும் நாடகத்தி லும் நாவலிலுந்தான் காதல் இப்போது சிரஞ்சீவியாக வாழ்கின்றது. நிஜவாழ்விற்கும் காதலுக்கும் இடைப்பட்ட தூரம் மிகமிக நீண்டுவிட்டது. காதல் பாதை கரடு முரடானது என்று தெரிந்தும், அந்தப் பாதையில் நெஞ்சத் துணிவோடு நேர்மைத் திறனேடு, உறுதியோடு, உற்சாகத்தோடு நடந்து சென்று, உண்மைக் காதலின் உயர்வைக் காட்டும் உதாரண புருஷனுக வாழ விரும்பினுன், தன்னுடைய நடத்தை மாணவர்களைப் பாதிக்கக்கூடாது என்று விரும்பினுன்; பாதிக்கமாட்டாது என்று நம்பினுன்.

அவனுடைய இந்த ஆசைகள், இலட்சியங்கள் அனைத்தையும் சிதறடித்து விடாதா அன்றையநிகழ்ச்சி?

இந்தப் பயம்தான் அவனைப் பற்றியிருந்தது.

யார், எதைத்தான் சொன்னுலும் அதைச் சகிக்கக்கூடிய சக்தி, பொறுக்கக்கூடிய பெருந்தன்மை அவனுக்கு ஓரளவு வந்துவிட்டது. ஆனுல் சாவித்திரியால் அது முடியுமா? யாராவது வேண்டுமென்றே அவள் பெயரைச் சந்திக்கிழுத்தால், அந்தப் பேதையரல் பொறுத்துக் கொள்ள முடியுமா?

இந்த ரீதியில் சண்முகத்தின் மனம் ஆராய்ச்சி செய்து அன்றைய நித்திரையை விரட்டியடித்தது. முடிவு கிட்டவில்லை. பொழுது விடிந்தது.

கல்லூரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுது தபாற்சேவகன் வந்துவிட்டான். சண்முகத்தின் கடிதங்கள் கல்லூரி முகவரியிட்டே வரும். அதிபரின் அறைக்குட் சென்று அவன் எடுத்துக் கொள்வான். ஆனுல் இன்று வழக்கத்துக்கு மாருக விடுதிச் சாலைக்கே கடிதம் வந்துவிட்டது.

கடிதத்தை வாங்கிச் சட்டைப் பைக்குள் வைத்துவிட்டு அவசர அவசரமாகக் கல்லூரிக்குச் சென்ருன். தான் எவ்வித ஆபத்துமின்றி உயிருடன்தான் இருப்பதாகச் சாவித்திரிக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்.

கல்லூரியில் அவர்கள் சந்திப்பதும் கிடையாது. கதைப்பதும் கிடையாது. ஆகவே சாவித்திரியின் கண்ணில் படக்கூடிய ஓரிடத்தில் நின்ருன் சண்முகம். சாவித்திரி தன்னை நிமிர்ந்து பார்த்ததையும், நிம்மதியான நெடுமூச்சு விட்டதையும் கடைக்கண்ணுல் அவதானித்தபோது ஏதோ ஓர் இன்ப உலகில் மிதப்பது போன்ற இனிய உணர்ச்சி ஏற்பட்டது. அவனைப்பற்றி அக்கறை கொள்ளவும், எண்ணவும் ஏங்கவும் எழில் உருவம் ஒன்று எந்நேரமும் தயாராயிருக்கின்றதே!

மணி அடித்தது. காலையில் வந்த தபாலின் நினைவு தோன்றியது. வகுப்பொன்றிற்குள் நுழைந்தபடி கடிதத்தை உடைத்துப் பார்த்தான்.

அன்புள்ள நண்பரே!

உங்களுக்காக நான் வருந்துகிறேன். வெகு தொலைவிலிருந்து கல்வி கற்பிப்பதற்காக இங்கு வந்த நீர், உமது கடமையை மறந்து காம விளையாட்டில் ஈடுபடுவது நல்லதா? விஷயத்தை முற்றவிட்டு வீணுகச் சங்கடப்படாதீர்.

—உண்மை விளம்பி

கடிதத்தைப் படிக்கும்போது கைகள் மட்டுமல்ல, உடம்பு முழுவதுமே நடு நடுங்கியது. பயமும் அவமானமும் அவனைப் பலமாகத் தாக்கத் தொடங்கின. கீழே விழாத குறையாக, கதிரைக்குள் போய் விழுந்தான்.

மாணவர்கள் பயந்து விட்டார்கள்.

"உங்களுக்கு என்ன சேர்? சுகமில்லையா? தேத்தண்ணீர் வாங்கிக் கொண்டு வரட்டுமா சேர்? படுக்கப் போகின்றீர்களா சேர்"? சண்முகத்தைச் சுற்றி மொய்க்கத் தொடங்கினுர்கள் அனைவரும்.

ஆத்திரத்துடன் அவர்களைப் பார்த்து உருட்டி விழித்தான். அஞ்சி ஒடுங்கிப்போய் உட்கார்ந்துவிட்டார்கள் அனைவரும். சண்முகத்தின் இந்த வழக்கத்திற்கு மாருன நடத்தையால் அவர்களிடம் தோன்றிய கலவர உணர்ச்சி முகங்களில் தொங்கியது.

நொடிப்பொழுதில் சண்முகம் தன் தவறை உணர்ந்து கொண்டான். கடிதத்தைப் பற்றிய எண்ணத்தை மனத்தின் ஒரு மூலைக்குள் தள்ளிவிட்டு, அன்போடும் ஆதரவோடும் பாடத்தை நடத்தினுன். ஆனுல் வழக்கமாக வகுப்பிலேயிருக்கும் கலகலப்பு அன்று வரவே மறுத்துவிட்டது.

மாலையில் கடைசிப்பாட நேரத்தைத் தவிர அன்று அவனுக்கு ஓய்வே இல்லை. அதுவும் நல்லதாகப் போய்விட்டது. மாறி மாறி ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று வந்ததில் அவன் கடிதத்தைப் பற்றிய நினைவையே இழந்துவிட்டான். உடல் சற்றுச் சோர்வடைந்திருந்தாலும், அவன் உள்ளம் தெம்பு பெற்றிருந்தது. கவலையை விரட்டும் கலையை அந்தக் கல்லூரி மாணவ மாணவிகள் எங்குதான் கற்றிருந்தார்களோ?

கடைசிப்பாட நேரத்தில் ஆசிரியர்கள் இளைப்பாறும் அறையில் தனியனுகத் தங்கியிருந்தபோது கடி

பேனு நண்பர்கள் சங்கம்

உலகத்தின் பல பகுதிகளில் வாழும் தமிழ் தெரிந்த இளைஞர்களுடன் தமிழில் பேனுத் தொடர்பு கொள்ள விரும்பும் ஆண்பெண் இருபாலரும் கீழ்கண்ட முகவரிக்கு மறுமொழிக்கு 15 சதம் அஞ்சல் தலைகளுடன் எழுதுக.

பேனு நண்பர்கள் சங்கம்
மேட்டூர் அணை (அஞ்சல்)
சேலம் மாவட்டம்—தமிழ்நாடு

தத்தை மறுபடியும் எடுத்துப் படித்தான். உணர்ச்சி வசப்படாமல் ஆறுதலாக அதைப்பற்றிச் சிந்தித்தான். முதனுளிரவு நடந்த நிகழ்ச்சியுடன் கடிதத்தை இணைத்தது மனம்.

எவருக்கும் எந்த விதத்திலும் கஷ்டம் விளைவிக்காது அவன் தன் வாழ்க்கையைத் தன் மனம் போன படி அமைத்துக் கொள்வதை அந்த ஊரிலுள்ள யாரோ ஒரு பிரஹஸ்பதி விரும்பவில்லை. மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருக்கும் அவன் வாழ்வில் மண்போட யாரோ திட்டமிட்டுச் சதி செய்கின்றுர்கள்!

உண்மை விளம்பி! மஹாபெரிய உண்மையைக் கண்டுபிடித்து விட்டார்கள் மடையர்கள்! அவன் செய்வது தவறு என்றுல், அந்தத் தவறைத் திருத்தி அவனை நல்வழிப் படுத்தவேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் யாரிடமாவது உண்மையிலேயே இருக்குமென்றுல், நேரிலே வந்து அவற்றைச் சுட்டிக் காட்டிக் கண்டித்திருக்கலாமே! அதுதான் போகட்டும், அப்படி 'முகத்தை முறிக்க, விரும்பாவிட்டால் எழுதின தபாவில் பெயரையும் முகவரியையும் தெரிவித்திருக்கலாமே! இவற்றைச் செய்யத் துணிவில்லாத முதுகெலும்பற்ற முட்டாள்கள் உண்மையை விளம்ப வந்துவிட்டார்கள், உண்மையை!

சண்முகத்தின் சிந்தனை மேலே தொடர்வதற்குமுன் கல்லூரிக் கடைசி மணி அடித்துவிட்டது. மாணவர்களின் சந்தடி அடங்கியதும் அவனும் எழுந்து வெளியே சென்றுன்.

விடுதிச் சாலைக்கு செல்ல ஏனே அவன் விரும்பவில்லை. கால்கள் தாமாகவே சாவித்திரியின் வீட்டிற்குச் செல்லும் பாதையில் மெல்ல மெல்ல நடந்தன.

இனி; அவன் வேறு அவள் வேறு அல்ல. அவனைப் பாதிக்கும் விஷயங்கள் அனைத்தும் அவளையும் பாதிக்கவே செய்யும். ஆகவே அந்தக் கடிதத்தை அவளிடம் கொடுத்து அவளுடன் கலந்தாலோசிக்க விரும்பினுன்.

சாவித்திரியின் வீடு கிட்டியது. முன்னிலும் பார்க்கச் சற்று வேகமாக நடந்தான்.

"சேர்...!"

சண்முகம் திரும்பிப் பார்த்தான். மாணவன் ஒருவன் இளைக்க இளைக்க ஓடிவந்துகொண்டிருந்தான்.

"உங்களுக்கொரு கடிதம் சேர்."

சண்முகத்திற்கு ஆச்சரியமாயிருந்தது. தபால் விநியோகம்தான் காலையில் முடிந்துவிட்டதே! இப்போது எப்படித் தபால் வரும்?

கேள்வி மனதில் எழ, கைகள் கடிதத்தைப் பிரித்தன. அதே 'உண்மை விளம்பி' தான் எழுதியிருந்தார்.

"ஓய் இளிச்ச வாயரே! எச்சில் பட்ட பழத்திற்கு ஏன் ஆசைப்படுகின்றீர்? திருந்துவீரா? அல்லது மருந்து வேண்டுமா?"

கனல்கக்கும் விழிகளுடன், கடிதம் கொண்டுவந்த மாணவனைப் பார்த்தான் சண்முகம்.

"இந்தக் கடிதத்தை உன்னிடம் கொடுத்தது யார்?"

பையன் பயந்துபோனுன். "பத்மநாதன் மாஸ்டர் தான் சேர் தந்தார்—போஸ்ட் பண்ணும்படி. உங்களைக் கண்டபடியினுல், நேரிலேயே தந்து விடலாமென்று ஓடிவந்துவிட்டேன்."

"பத்மநாதனு?" திறந்த வாய் மூடாது கேட்டான்.

"ஓம் சேர்! அவர்தான் தந்தார்" என்று சொல்லிவிட்டு ஓடி விட்டான் அவன்.

" 'உண்மை விளம்பி' பத்மநாதனு?' சண்முகம் மேலே பேசவில்லை; பேச முடியவில்லை. நடக்கவில்லை; நடக்க முடியவில்லை அப்படியே, அங்கேயே நின்ருன். கல்லுப் பிள்ளையார் போல் நின்ருன். ஆச்சரியமும் அதிர்ச்சியும் அவனை ஆட்கொள்ள, உணர்ச்சியற்று, மரத்துப்போய் நின்ருன்.

தற்செயலாக வாசற்புறம் வந்த சாவித்திரி சண்முகத்தின் இந்தக் கோலத்தைக் கண்டாள்; ஓடோடியும் வந்தாள்.

"மாஸ்டர்...!"

"............"

"சண்முகம்"

அவனுக்கு அதுவும் கேட்கவில்லை. ஆபத்துக்குப் பாவமில்லை என்று நினைத்து, சுற்று முற்றும் பார்த்து விட்டு, சண்முகத்தின் தோளைப் பிடித்து அசைத்தாள் சாவித்திரி.

தூக்கத்தில் நடப்பவர்கள் எதனேடாவது மோதிவிட்டுத் திடுக்குற்று விழிக்கும் நிலையில் சண்முகம் இருந்தான்.

"சாவித்திரி!"

"என்ன? ஏதோ பேய் பிடித்தவர் போல் பேசாது நின்றீர்களே, நான் பயந்துவிட்டேன்."

சண்முகம் அவளைத் தொடர்ந்து வீட்டிற்குச் சென்ருன்.

வழக்கம் போல் இருவரும் இருந்து உரையாடும் நடு மண்டபத்திற்குச் சாவித்திரி அவனை அழைத்துச் சென்ருள்.

"அது சரி, இன்றைக்கு என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள்?" — சாவித்திரி கேட்டாள்.

சண்முகத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"அற்பன்! நண்பன் போல் நடித்து நஞ்சைக் கலக்கும் நயவஞ்சகன். நரிப்புத்தி படைத்த நாசகாரன்."

"சண்முகம்!"

"உந்தப் பத்மநாதன்தான். பண்பாடு தெரியாத படித்த முட்டாள்... அவன்ரை திருப்பணியைப் பார் சாவித்திரி" என்று சொல்லிக் கொண்டே அந்த இரண்டு தபால்களையும் சாவித்திரியிடம் கொடுத்தான்.

ஆவலுடன் அவற்றைப் படித்து விட்டு, அமைதியாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் நீர் முட்டியிருந்தது.

"பத்மநாதனை நான் நேரில் சந்தித்தால் நான் என்ன செய்து விடுவேனே தெரியாது சாவித்திரி. இப்படியானவர்களை சும்மா விட்டுவிடக் கூடாது."

"சண்முகம்! கொஞ்சம் பொறுங்கள். எதிலும் அவசரப்படக்கூடாது. ஆத்திரப்படக்கூடாது."

"உந்தப் பொறுமையெல்லாம் இந்தக் காலத்துக்கு ஒத்துவராது சாவித்திரி. மௌனமாக நாம் இருந்தால் நம் மானத்தைக் கப்பலேற்றி விடுவான் அந்த மடையன். அதிபரிடம் 'ரிப்போர்ட்' செய்யப் போகின்றேன்."

"வேண்டாம் சண்முகம்! உங்கள் வீழ்ச்சிக்கு நீங்களே குழி பறித்து விடாதீர்கள்."

"சாவித்திரி" சண்முகம் கத்தினான்.

சாவித்திரி தலையைக் குனிந்து கொண்டாள். அவள் குரல் தாழ்ந்தது. விக்கி விக்கி, திக்கித் திக்கிப் பேசினாள். 'அதிபர், பத்மநாதனின் சொல்லைத்தான் நம்புவார். ஏனென்றால் பத்மநாதன் சொல்வதில் உண்மையில்லாமலில்லை."

"சாவித்திரி!"

சாவித்திரி ஒன்றுமே பேசாது மௌனமாக எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

சண்முகத்தின் இதயம் குமுறியது; கொந்தளித்தது. அன்பின் அருவி பாய்ந்த அவன் நரம்புகளில் ஆத்திரக் காட்டாறு பெருக்கெடுத்தது. கோப மிகுதியில் அவன் உடல் நடுங்கியது.

"அப்படியானால் பத்மநாதன் எழுதியது உண்மையா? நீ......?" பாயத் தயாராகும் வேங்கையாய் நின்ற அவன் கர்ச்சித்தான். "உண்மையா சாவித்திரி?"

"முழுவதும் உண்மையல்ல...... ஆனால்......"

சண்முகத்தின் உக்கிரநிலை அவளை மேலே பேசவிடவில்லை.

வெறி பிடித்தவன் போல் கூச்சலிட்டான் சண்முகம். "சீ! பேயே பேசாதே... என் முகத்திலே விழிக்காதே."

ஆத்திரம் உச்சநிலையைத் தாண்டினால் அழுகை வருமே, அப்படி அழுதான் சண்முகம். அந்த அறைக்குள் நிற்கவே பிடிக்காதவன் போல் பாய்ந்து ஓடிவிட்டான். "சண்முகம்! சண்முகம்!" என்று சாவித்திரி பரிதாபத்துடன், பச்சாத்தாபத்துடன் எழுப்பிய குரல் அவன் காதுகளில் விழவேயில்லை.

—தொடரும்.


## கலைச்செல்வி விற்பனையாளர்கள்

நவா புத்தகசாலை,
மெயின்வீதி,
நக்குவாலை.

திரு. க. நாகராஜா,
நியூஸ் ஏஜன்ற்,
முல்லைத்தீவு.

"நகைச் சுவையும் நல்ல கருத்தும் கலந்தென்றும்
பகையுணர்ச்சி மாய்க்கும் பட் பட்."

# பட்! பட்!!

— தாண்டவக்கோன் —

எஸ். துரைநாயகம், திருக்கோணமலை.

கே. உலகத்தில் மிகச் சிறந்தவீரன்?

ப. தற்கொலை செய்பவன்!

க. இராமநாதன், கொக்குவில்.

கே. தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செய்வதற்கு ஓர் இயக்கம் தோற்றுவிப்பது நல்லதா?

ப. தேவையில்லை. பஸ் கண்டக்டர்கள், பனம்பால் சுவைக்கும் பரம ரசிகர்கள், சுன்னுகச் சந்தைக்கு வரும் பெண்கள்—தனிப்பட்ட இயக்கம் எதுவுமில்லாமலே தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்கின்ருர்களே!

கு. கணபதிப்பிள்ளை, ஆரையம்பதி.

கே. ஈழத்தின் சிறந்த நகைச்சுவை எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிட முடியுமா?

ப. குயுக்தியார், ரீ. பாக்கியநாயகம், கொழும்பு—சிவம்.

அ. ஆனந்தக்குமாரசாமி. காரைநகர்.

கே. காதலையே தொழிலாகக் கொண்டிருப்பவர்களைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

ப. உழைப்பிற்குத் தகுந்த உதை பெறும் உத்தமர்கள்!

மாலினி, யாழ்ப்பாணம்

கே. அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்திருப்பவன் யார்?

ப. ஐஸ்கிறீம் வியாபாரி!

ச. அனந்தன், சுதுமலை.

கே. ஆனந்த விகடனில் திருக்குறட் கதை எழுதும் 'சாவி'யும் 'மணியனு'ம் ஒருவரா?

ப. இல்லை. 'சாவி'யின் சொந்தப் பெயர் சா. விஸ்வநாதன்; 'மணியனின்' பெயர் சுப்பிரமணியன். இவர் 'மயன்' என்ற பெயரிலும் கதை எழுதுபவர். இதே 'மயன்' என்ற பெயரில் இலக்கிய விமரிசகர் க. நா. சு. அவர்களும் சில சோதனைக் கவிதைகள் "சரஸ்வதி"யில் எழுதிவருகின்ருர்.

கே. 'கல்கண்டு' 3,22000 பிரதிகள் விற்பனையாகிறதாமே!

ப. விற்பனையாகிறதா? 3,22000 பேர் படிக்கின்ருர்கள் என்றுதான் சில வாரங்கட்குமுன் வெளியான 'கல்கண்டு' கூறுகின்றது. ஒரு பிரதியைப் பணத்திற்கு வாங்கி நூறுபேர் கூடப் படிக்கலாமல்லவா?

ஆ. கந்தையா, கைதடி.

கே. பண்டைத் தமிழர் பண்பாடு இன்று எங்கே?

ப. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது!

# லங்கா நிதி லிமிற்றெட்

நிரந்தர சேமிப்புக்கு, கீழ்க் குறிக்கப்பட்ட வீதம்

## வட்டி கொடுக்கப்படும்.

1 வருடம் - 6 சத வீதம்.
2 வருடம் - 7 சத வீதம்.
3 வருடம் - 8 சத வீதம்.
5 வருடம் - 9 சத வீதம்.

சேமிப்பு கணக்கிற்கு

## வருடம்
## 5 சத வீதம் வட்டி கொடுக்கப்படும்

நவீன சேமிப்பிற் சேர்ந்து பல நன்மைகளையும் அடையுங்கள்

இலங்கையில் விசேஷமாக ஏற்படுத்தப்பட்டது.
முழு விபரங்களும் இலங்கா நிதி ஆபிசில் அறியலாம்.

# இலங்கா நிதி லிமிற்றெட்

திருநெல்வேலி : : யாழ்ப்பாணம்

கிளை:
284, காங்கேசன் துறை வீதி : : வண்ணார்பண்ணை

# FANCY PALACE

## THE HAPPY PALACE

WITH

## HAPPY GIFTS

- ரேயல் தலைமுடிகள்
- ரேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனாக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்

**ஏக விநியோகஸ்தர்கள்**

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்

பலவிதமான

## பரிசுப் பொருட்களை

**விசேட தினங்களில்**

உங்கள் உற்றார் உறவினருக்கும், நண்பர்களுக்கும்,

பேனா நண்பர்களுக்கும்

## வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware    போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

சிறையில் சிக்கித் தவித்தபோது ஆண்டவனை எண்ணி எழு பிய கூக்குரல் ஆண்டவனுக்குக் கேட்டதோ இல்லையோ, வி தலைகிடைத்தது. எப்படி ?

# சிறை

"தீவான்"

ஏ ஆண்டவா !

நீ உண்மையில் இருக்கிருயா? அப்படியானுல் இது எல்லாம் என்ன கூத்து? இத்தகைய அநீதியும் ஆய்க்கினையும் உன் புனித நிழல்படியும் இப்பூவுலகில் நடப்பதேனே? நான் என்ன குற்றஞ் செய்தேன், இத்தகைய கொடுஞ் சிறையுள் நுழைவதற்கு? யாரைக் கொன்றேன்? யார் கழுத்தைத் திருகினேன்? எவர் பொருளைத் திருடினேன்? எந்த வீட்டில் கன்னம் வைத்தேன்? எதற்காக எனக்கிந்தச் சிறைத் தண்டனை? நான் செய்த குற்றந்தான் என்ன?

'நீதிபதி' 'வழக்கறிஞன்' என்னும் பெரும் பெரும் பட்டங்களைச் சுமந்துகொண்டு வாழும் இந்த அற்பமனிதர்களிடம் நீதி கேட்டுப் பயனில்லை. அவர்களது நீதி நேர்மையெல்லாம் வெறும் கண்துடைப்பு. பொய்யை மெய்யென்றுகூறும் கேலிக் கூத்து! அந்த மனிதர்களின் அறியாமையினுலும் அற்ப தவறுகளினுலுமே நான் இந்த நிலைக்குள்ளானேன். அதைத் தீர்ப்பதற்காகவே எல்லாம் வல்லவனுன உன்னைக் கூவியழைக்கிறேன். நடுநிலைமை வகிப்பாயா?

பழியோரிடம் பாவம் வேறிடம் என்பது போல் யார் யாரோ செய்த தவறுக்காக எனக்கிந்தச் சிறைத்தண்டனை! விசித்திரமாய் இருக்கிறது! நீதி நேர்மை என்பவை இவ்வுலகில் நிலவினுல் எனக்கிந்தக் கொடிய நிலை நேருமோ? அவையெல்லாம் எங்கோ கவிழ்ந்து அமிழ்ந்து விட்டன.

நீதிக்காகப் போராட யாருமில்லை. நேர்மைக்காக வாதாட ஒருவர் இல்லை. நான் அனுதை. ஆண்டவனுனஉன்னிடம் முறையிடுகிறேன். ஆகப்போவதை நீ தான் அறிவாய்.

முளைத்து, இம்மானிட உருவெடுத்த காலந்தொட்டு யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத எனக்கு யாரிடமும் வாதாடியறியாத எனக்கு இத்தகைய கொடுஞ் சிறைத் தண்டனை;

# பல கோடி

ச. வே பஞ்சாட்சரம்

உண்மைகளோ பல கோடிகளாம் — புவி
ஓர்ந்தவையோ இதிற் சிற் சிலவாம்!
வண்மைகளோ பல கோடிகளாம் — கண்டு
மானிலம் வாழ்த்துவதோர் சிலவாம்!
எண்ணுவதோ பல கோடிகளாம் — வாழ்வில்
எய்துவதோ இதிலொன்றிரண்டாம்!
எண்ணில் நாம்வாழ்தல் பல்கோடிகணம் — எனின்
இன்ப மடைதல் சில பொழுதாம்!
வையத்தி னுயுள் பல் கோடி கல்லாம் — இது
வாழ்த்தியோ தூற்றியோ பேச என்றும்,
செய்யும்படி வாழும் வாழ்வு நாளோ — தம்பி,
தேர்ந்திடில் சாண் நூலின் நீளமேயாம்!
மண்டைக் கனமெதும் கொள்வதில்லை — தோல்வி
வந்திடினும் சோர்வு கொள்வதில்லை!
கண்டிட உண்மைகள், வண்மைகளை — ஊக்கம்
காட்டிப் புகழ் மகிழ் வெய்திடுவோம்!

---

நான் ஓர் அப்பாவி. நல்லது கெட்டது அறியாத அசடு. குற்றம் என்றால் 'அது என்ன' என்று கேட்கவே தெரியாத கோமரளி. அப்படிப்பட்ட எனக்குக் கிடைத்துள்ள பரிசு சிறை! என்னைப்போல் இன்னும் எத்தனை அப்பாவிகள் இத்தகைய கொடுஞ் சிறையுள் அவதியுறுகிறார்களோ!

ஏ ஆண்டவா. உன்னைத்தான்! உன் அருள் எங்கே, செத்து விட்டதா?

" க்குவா! க்குவா!"

இப்படிப் பலநாள் ஆண்டவனிடம் நீதிகேட்ட அந்தச் சிசு, ஒரு நாள் தாயின் வயிறு என்னும் சிறையிலிருந்து, ஓராண்டு காலச் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டு- இல்லை, அச்சிசு கடைப்பிடித்த நல்லொழுக்கத்தின் காரணமாய் இரண்டுமாதம் முன்னதாகவே வெளிவந்து விட்டது. இனி இந்த வெளியுலகச் சிறையில் உழலப் போகிறது.

இத்தனைக்கும் அது செய்த குற்றம்?

# எழுத்துலகில் நான்

**கனக. செந்திநாதன்**

“சாடியுள் நறவமுண்டாள் தன்னுரு வேறுபாட்டை
ஆடியுள் நோக்கி நானே அல்லனே எனைத்தான் கைக்கொண்(டு)
ஓடினர் பிறருமுண்டோ உயிரனான் வந்திங் கென்னைத்
தேடின் என் செய்வேன் என்னைத் தேடித்தா தோழி என்றாள்”

திருவிளையாடற் புராணம் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில் வரும் செய்யுளிது. ஆசிரிய உலகத்துக்கு வேண்டிய சட்டையைக் கழற்றி விட்டுத் திரும்பிப் பார்க்கையில் ‘எழுத்துலகில் நான்’ என்பதைப்பற்றி எழுதுக என்ற கட்டளையைக் கண்டேன். ‘சாடியுள் நறவமுண்டவள்’ நிலைதான் எனக்கு அப்போது. என் உருவத்தையே மறந்து ‘நானே – அல்லனே’ என்ற பைத்தியகாரன் நிலை அடுத்து ஏற்பட்டது. ‘என்னை ஒருக்கால் தேடித்தரமாட்டாயா?” என்று என் மனமாகிய தோழியிடம் மன்றாடினேன். அவள் தேடி எடுத்த என்னை உங்கள்முன் காட்டுகிறேன். அவ்வளவுதான்.

என்னுடைய ஊராகிய குரும்பசிட்டியில் உள்ள சன்மார்க்க சபைக்குச் சொந்தமாகிய வாசிகசாலை என்னுடைய எழுத்தாளத்துறைக்கு வழிகாட்டியது. அது 1934-ல் ஈழகேசரி பொன்னையாவால் ஆரம்பிக்கப்பட்டு இந்தவருடம் வெள்ளிவிழா கொண்டாடப் போகிறது. அதன் ஆரம்பகாலத்தே, ஈழகேசரிக்கு மாற்றுப்பத் [illegible] திரிகைகளை எல்லாம் பொன்னையா அவர்கள் தந்துதவினார்கள். எனவே எனது பதினெட்டு வயதிலே இவற்றை எல்லாம் – அது எந்தக்கட்சிப் பத்திரிகையாய் இருந்தாலும்–வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அது ஒரு பெறற்கரிய பேறு என்று இப்போது கருதுகிறேன்.

> ......இவ்வளவையும் வாசித்தபின் என்னை எழுத்தாளன் என்று நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லையானால், ஒரு காரணம்தான இருக்கமுடியும். தமிழ் நாட்டுப் பத்திரிகை எதிலும் நான் ஒரு வரிகூட எழுதியதில்லை. உண்மை. நம்பாவிட்டால் விடுங்கள்.

1938–ல் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையிடம் இலக்கண இலக்கியத்தையும், சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதியிடம் வாசிப்பையும் எழுத்தையும் படிக்கும் நல்வாய்ப்புக்கிடைத்தது. கண்டதெல்லாவற்றையும் படித்துக் காட்டாறுபோலத் திரிந்த என்னைப் பயனுள்ள வாய்க்காலுக்குள் செலுத்தி, எதைப் படிக்கவேண்டும்? எப்படிப் படிக்கவேண்டும்? ஒவ்வொரு எழுத்தாளரிடமும் உள்ள விஷேட திறமை என்ன? என்று நுண்ணிதாக எடுத்துக் காட்டிய பெருமைக்குரியவர் பொ, கைலாசபதிகளாவர். அந்தக்காலத்திலேயே, காற்று (சுப்பிரமணிய பாரதி) கண்டதும் கேட்டதும் (சாமிநாதையர்) உண்மை நாயன்மார் மகிமை

...தங்கள் (வேதாசலம்) ஏட்டிக்குப் போட்டி (கல்கி) தேசபக்தன் கந்தன் (வேங்கடரமணி) தாகம் (பெ. நா. அப்புஸ்வாமி) பாஸ்கரன் (எஸ். வி. வி.) என்பவற்றை வாசிப்பித்தும், ...டிதம், சுருக்கம், மதிப்புரை, ஆராய்ச்சி, சம்பாஷணை என்பவற்றை எழுதுவித்தும் அவர் வாசிப்பிலும் எழுத்திலும் ஆசையை உண்டாக்கினர். ஓரளவு பத்திரிகைத்துறைக்கு வேண்டிய ஆரம்ப படியை மனதில் வைத்துக்கொண்டே அப்பாடங்களை நடாத்தினர். ஆனால் அப்போது மற்றைய ஆசிரிய மாணவர்கள் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

ஆசிரிய கலாசாலையில் இருக்கும் போதே ஈழகேசரியில் பாலர்பகுதிக் கேற்ற கட்டுரைகளை எழுதினேன். பின்பு அதன் ஆசிரியராய் இருந்த சோ. சிவபாதசுந்தரம் அவர்களோடு அறிமுகம் ஏற்படக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. ஈழகேசரியில் பாலர்பகுதியில் சேர்ந்திருந்த இளைஞர்களுக்காகப் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கதைப்போட்டி என்பவற்றை 'சோ. சி. அவர்கள் நடாத்தினார்கள். பேச்சுப்போட்டியும் வருடாந்த விழாவும் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடந்தது. அதில் பங்குபற்றிய ஒரு இளைஞருக்காக 'நாட்டுப்புறத்தில் தோட்டக்காரன்' என்ற ஒரு புது விடயத்தை—பேசுவதற்காக எழுதினேன். சி. சிவானந்தன் என்ற இளைஞர் (தற்போது செங்குந்த இந்துக்கல்லூரியில் ஆசிரியராயிருப்பவர்) அதை அழகாகப் பேசினர். பேச்சுப் போட்டியில் முதலாவதான நாவலர் தங்கப்பதக்கத்தைப் பெற்றார். 'சோ. சி' அவர்கள் இளைஞரது பேச்சுத் திறமையையும் அப் பேச்சுக்குத் துணைசெய்த தமிழ் நடையையும் வெகுவாகப் பாராட்டி அடுத்த இதழில் எழுதினர். அதைக் கண்ட பத்திராதிபர் பொன்னையா அவர்கள் கட்டுரையைத் தயார்செய்த என்னை 'சோ. சி' அவர்களுக்கு அறி...

...டுரையைப் பிரசுரிக்கும் படியும் செய்தார்கள். அன்று தொடங்கிய அறிமுகம் எங்களை இலக்கிய நண்பர்களாக—ஓரளவு குரு – சிஷ்ய-பந்தமாக இறுகப் பிணைத்தது. இந்தப் பிணைப்பு நான்கு வருடம் நீடித்தது.

இந்த நான்கு வருடத்துள் பாடபுத்தகங்கள் (பாலபோதினி) (பரதன்) முதலியவற்றை எழுதும்படி பொன்னையா அவர்கள் பணித்தார்கள். பனிக் காலங்களிலே காங்கேசன்துறையில் ஒரு வீட்டை வாடகைக் கமர்த்திக்கொண்டு சோ. சி, சானு (சண்முகநாதன்) அதிபர் நா. பொன்னையா நான் எல்லோரும் தங்குவதுண்டு. பால்போன்ற நிலவிலே வெண் மணற் பரப்பிலே, தெள்ளு கடற்காற்று மெல்லென வீச, வீட்டிலே ஸ்ரீமதி பொன்னையா அவர்கள் பக்குவமாகச் செய்த உணவை சாப்பிட்டபடியே ஏதேனும் ஒரு இலக்கிய விஷயத்தைப் பற்றிப் பேசியபடியே வாழ்ந்த அந்தப் பொற்காலங்கள் ...... பெற்ற அறிவுச் செல்வங்கள்.........

அக்காலங்களிலே தான் வ. ரா, புதுமைப் பித்தன், கு. ப. ரா., சிதம்பர. சுப்பிரமணியன், க. நா. சு. என்போரைப் பற்றியும் அவர்களது இலக்கிய முயற்சிகளைப்பற்றியும் கலந்துரையாடினோம். 'சோ. சி' அவர்கள் தந்த ஊக்கத்தினாலே சிறுகதை, கட்டுரைத்துறைகளில் முதல் அடிஎடுத்து வைக்கலானேன். மன்னிப்பு என்ற கதை ஈழகேசரி (1940) ஆண்டு மலரிலும், பாரதி கண்டசகுனி 1939-ம் ஆண்டுமலரிலும் இடம் பெற்றன. இவைதவிரப் பல சிறுகதைகளும் கட்டுரைகளும் வார வெளியீட்டில் வெளிவந்தன.

சோ. சிவபாதசுந்தரம் ஈழகேசரியை விட்டுவிலகி இலங்கை வானொலிக்குப் போனபின்னர் அப் பத்திரிகையோடு தொடர்புகொண்ட இளைஞர் சிலரும் வேறு பல ஆர்வம்

சங்கத்தை (1943-ல்) ஆரம்பித்தார்கள். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஒரு வீட்டில் இதன் ஆரம்பக் கூட்டம் நடைபெற்றது. முதலாவது கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அந்தத் தொடர்பினாலும் மாதாமாதம் அது நடத்திய இலக்கிய சர்ச்சைகளினாலும் பெற்ற பயன் அளவிடற்கரியது. அநேகமாக தி ஜ. ர, சாமிநாதசர்மா, கலைவாணன். வல்லிக்கண்ணன், என்போரது எழுத்துக்கள் பற்றியே கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன. அந்தக் காலத்தில் புத்தக மதிப்புரை, சிறு கதை என்ற இரு துறைகளிலும்தான் என் மனம் சென்றது. ஏற்கனவே புத்தக மதிப்புரைகளைச் சற்று விரிவாகவும் நேர்மையாகவும் நல்ல ஆராய்ச்சித் திறமையுடனும் சோ. சிவபாத சுந்தரம் அவர்கள் செய்துவந்தார்கள். அவர் சென்ற பாதையிலேதான் ஈழகேசரி அது நிறுத்தப்படுமளவும் சென்று தமிழ் நாட்டிலேகூட ஓரளவு நல்ல புகழைச் சம்பாதித்திருக்கிறது. அதைக் கட்டிக் காக்க வேண்டுமென்று என் மனம் எண்ணியது. அதை இயன்றளவு செய்திருக்கிறேன் என்பதை எண்ணி இன்னும் பெருமைப்படுகிறேன்.

மறுமலர்ச்சிக் கூட்டத்தாரோடு சேர்ந்திருக்கும்போது எழுதிய பல கதைகளில் ஒன்றுதான் ஒரு பிடி சோறு. ஈழநாட்டுச் சிறு கதைத் தொகுதியில் அது இடம்பெற்றிருக்கிறது. விமர்சகர்களால் ஓரளவு நல்ல கதை என்றும் ஈழநாட்டைப் பிரதிபலிக்கக்கூடிய கதை என்றும் புகழ்ந்து எழுதப்பட்டது. யாழ்ப்பாண மாதா மலடியென்று பெயர் கேளாமல் சத்திர சிகிச்சையோடு பெற்றெடுத்த நொண்டிக் குழந்தை தொண்டமானாறு. அந்த உப்புக் களிக்கு 'ஆறு' என்று பெயரிட்டதே விசித்திரம். அதனிலும் விசித்திரம் அந்தக் களிக்கரையில் முருகப்பெருமான் இருக்கஎண்ணங்கொண்டகதை' என்று தொடங்கும் வர்ணனையைப் பலர் பாராட்டியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு நான் எழுதிய பல கதைகளில், எதிர் பாராதது, போட்டி,

ஆனந்தக்கோனாரின் அரும் புதல்வன் படுசுட்டிக்கு பாடசாலையில் படித்த ஒரு வாக்கியம் நினைவுக்கு வந்தது. அதை தன் தந்தையாரான எல்லாம் தெரிந்த ஆனந்தக் கோனாரிடம் கூறிப்பொருள் அறிய ஆவல்ப்பட்டான்.

"காயம் பட்ட மான் கதறியது என்ற வாக்கியத்தின் பொருள் என்னப்பா?" என்று படுசுட்டி கேட்டான்.

"மகனே! காயமே இது பொய்யடா என்பதால் காயம் என்றால் உடல் என்று தெரிகிறது. ஆனால் அது இங்கு பொருத்தமில்லை ஆகையால் காயம் மான் ஆகிய இந்த இரு சொற்களும் வேறு ஏதோ சொற்களில் இருந்து திரிந்து சிதைந்து குன்றிக் குறுகியிருக்கலாம். என்று நினைக்கிறேன்."

"எப்படி அப்பா?"

"ஏன் உதாரணமாக வெங்காயம் பெருங்காயம் ஆகிய சொற்களில் இருந்து காயம் என்ற சொல் வந்திருக்கலாம்"

"அப்படி யென்றால் மான் என்ற சொல் எந்தச் சொற்களில் இருந்து வந்திருக்கலாம்" என்று பயபக்தியோடு கேட்டான் படுசுட்டி.

"சிவபெருமான், எசமான் அந்தமான், சுலைமான், சீமான் கோமான்......" என்று அடுக்கிக் கொண்டே போனார் எல்லாம் தெரிந்த ஆனந்தக் கோனார்.

—கொழும்பு சிவம்

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

--1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது--

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா

இதுவரை கொடுக்கப்பட்ட பங்குப்பணம் 616313.00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணம் கட்டு முறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமான 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும் பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 8 விகிதமும் 6 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பிரீயல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியுலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விஷேச ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்து கொள்ளலாம்

**எஸ். கனகசபை**

சிருப்பர்.

சமர்ப்பணம், செம்மண் என்ற கதைகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. செம்மண் என்ற சமீபத்திய கதையை ஈழத்தின் பிரபல எழுத்தாளர் சி. வைத்திலிங்கம் பராட்டிக் கடிதம் எழுதியிருப்பது எனது குறிக்கோளில் நான் அடைந்த ஒரு வெற்றியாகும்.

மறுமலர்ச்சிச் சங்கத்தை நடாத்திய வரதராஜன் (வரதர்) மறுமலர்ச்சி, ஆனந்தன் தேன் மொழி என்ற பத்திரிகைகளைக் காலத்துக்குக் காலம் நடாத்தினர். ஆனந்தன் மாதப்பத்திரிகையில் 'எழுத்தாளராக' என்ற தலைப்பில் சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை என்பவற்றைப் பற்றி எழுதினேன். தொடர்ந்து நாடகம், வசனகவிதை, விமர்சனம், இலக்கிய வளர்ச்சி என்பவற்றை எழுதி உருப்படியான ஆரம்ப நூலொன்றை ஆக்கலாம் என எண்ணியிருந்த போது பத்திரிகை நின்று விட்டது.

1945ம் ஆண்டளவில் பாடசாலைகளில் கீழ்வகுப்புகளில் இலக்கியம் படிப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட பொழுது இலக்கிய மஞ்சரி என்ற பாட நூல்களை பண்டித வ. நடராஜனுடன்சேர்ந்து எழுதினேன். ஈழத்தில் அது என்பெயரை ஓரளவு பிரபலப்படுத்தியுள்ளமை குறிப்பிடக் கூடியதாகும்.

சிறுகதையில் ஓரளவு அலுப்புத் தட்டவே நாவல் எழுதும் முயற்சியில் இறங்கினேன். 'விதியின்கை' என்ற என்னுடைய முதல் நாவல் கிராமியச் சூழ்நிலையை வைத்து எழுதப்பட்டதாகும். கிராமப்பாடசாலையும் காவடி ஆட்டமும் கிராமச்சங்கத் தேர்தலும் நன்கு அழுத்தமாக எழுதப்பட்டிருக்கின்றன. ஓரிரு பாத்திரப் படைப்புகளில் சோடை போனலும் ஈழத்தின் சிறந்த கிராமிய நாவல் என்று பிரபல நாவலாசிரியர் 'இளங்கீரன்' எழுதியிருப்பது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயமாகும். 'வெறும் பானை' என்ற அடுத்த நாவல் எனக்குத் தோல்வியையே அளித்தது.

அதோடு நாடகங்களிலும் கை வைத்தேன். தாகம், மன்னிப்பு என்ற மேடை நாடகங்கள் சன்மார்க்க கலை மன்றத்தினரால் அரங்கேற்றப்பட்ட போது அவை நன்கு இரசிகர்களால் போற்றப்பட்டன.

பண்டிதமணி அவர்களது தொடர்பு ஏற்பட்டபின் ஈழத்து இலக்கியம், ஈழத்துப் புலவர் பரம்பரை என்பவற்றில் யாருக்கும் ஒரு 'பிடிப்பு' ஏற்பட்டே தீரும். அதற்கு நான் மாத்திரம் எப்படித்தப்பமுடியும்? அவருடைய கட்டுரைகள், சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் என்பன பத்திரிகைகளில் வரும் போது அவற்றை வெட்டி ஒட்டிப்புத்தகங்களாகச் சேமித்தேன் புலவர்பாடலிலிருந்து" "விடிந்த இரவும்–விடியாத இரவும்" என்ற தலைப்பில் 'வாழையும் புலவனும்" என்ற ஒரு பழைய பாட்டை விமர்சனம் செய்து (வரதர் வருடாந்த மலர்) எழுதிய போது பலர் அதைப்பாராட்டி எழுதினர்கள் அதைத்தொடர்ந்து புலவரது பாடல்களில் சிலவற்றிற்கு ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை எழுதினேன். திருநெல்வேலி ஆசிரியகலாசாலை மாணவர் ஒருவர் அதைப் பிரதி செய்து பண்டித மணியிடம் காட்டினர், பண்டிதமணி, 'நல்லாயிருக்கிறது கட்டுரை' என்று சொல்லவே அதைப்பகுதி பகுதியாக ஈழகேசரிக்கு அனுப்பி வைத்தேன். அக்காலத்து ஈழகேசரி ஆசிரியராயிருந்த இராஜ–அரியரத்தினம் அவர்கள் அதை வெகுவாகப் பாராட்டியதோடு அப்படி ஒவ்வொரு எழுத்தாளர்களது படைப்புகளைப்பற்றியும் எழுதுமாறு தூண்டினர். அவருடைய தூண்டுதலும், பழைய பத்திரிகைத் துண்டுகள் (குப்பைகள்) வீட்டையே அடைத்துக் கொண்டிருந்த காட்சியும் ஏதாவது உருப்படியாகச் செய்துவிட்டு இவற்றை விற்றுவிடவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கின. அதிலிருந்து பிறந்தது தான் ஈழத்துப் பேனு மன்னர்கள் என்ற வரிசை.

எனக்கு ஓரளவு விமர்சகர் என்ற பெயரை ஏற்படுத்தியது ஈழத்துப் பேனு மன்னர்கள் என்ற இந்த வரிசையே. நாற்பது எழுத்தாளர்களை நான் அறிமுகம் செய்து வைத்த போது இந்தக் 'கரவைக் கவிகந்தப் பனர்" யார்? என்றே பலரும் அதிசயப்பட்டார்கள். வேறு சில பத்திரிகைகள் எழுத்தாளர்களைச் சந்தித்து அல்லது கடித மூலம் அவர்கள் படைப்புகளைப்பற்றி வினவியே இப்படியான அறிமுகத்தைச் செய்தன என்பதுவும் எனக்குத்தெரியும். எனினும் நான் அந்த வழியைக் கையாளவில்லை. முன் பின் எனக்கு அறிமுகமில்லாத முப்பது பேர் இருந்தும் (பத்துப்பேரை ஓரளவு அறிவேன்) அவர்களைப்பற்றி எழுத உதவியன, பழைய பத்திரிகைக் கட்டுகளும் சன்மார்க்க சபை வாசிகசாலை நூல்நிலையமுமே யாகும். 1955ம் ஆண்டு தை மாசம் தொடங்கி ஒருவருடமாக ஈழ கேசரியில் இதை எழுதி வந்த போதும் — இப்போதும் — எழுத்துத் துறையில் மன்னர்களாக ஒரு பதினைந்து பேரைத்தான் சொல்லலாம். மற்றவர்களை அவர்களோடு சேர்த்தெழுதியிருக்கக்கூடாது என்ற அபிப்பிராயத்தைச் சிலர் சொன்னுர்கள், சொல்கிருர்கள். அதற்குப் பல காரணங்கள் இருப்பினும், ஒரு விமர்சகனது அபிப்பிராயம் அது' என்ற அளவிலேயே இந்த வரிசை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். யார் எப்படிக் கூறினுலும் இந்த முயற்சி ஈழத்தில் யாருமே சரியாகத் திட்டமாகச் செய்யமுடியாது. இதை ஓரளவு சரியாகச் செய்திருக்கிறேன் என்ற மனநிறைவு எனக்கு எப்போதுமே இருக்கிறது.

கவிஞர் மு· செல்லையா அவர்களுக்கு வானெலி நிலையத்தார் கவிஞர்பட்டம் அளித்த போது யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அவரைக் கௌரவித்தது. அதில் நான் அப்பாடல்களைப்பற்றிச் செய்த விமர்சனப்பேச்சை 'கவிதை வானில் ஓர்வளர் பிறை' என்று நூலாக்கி வரதர் வெளியீடு வெளியிட்டிருக்கிறது. நாற்பதுக்கும் மேற்பட்ட இலக்கிய ரசிகர்களும் அதைப்பற்றிக் கடித மூலம் நல்லபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

பண்டித மணியின் அறுபதாம் ஆண்டுப் பூர்த்தியின் போது அவரது வாழ்க்கை வரலாற்றையும் வண்டமிழ்த் தொண்டையும் பற்றி எழுதினேன். மூன்ருவது கண் என்ற இந் நூலையும் வரதர் வெளியீடே வெளியிட்டது. அதற்கும் கணிசமான மதிப்புக் கிடைத்தது.

ஈழத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற கட்டுரைத் தொடர் எட்டுப்பிரிவுகளாகத் தினகரன் ஞாயிறு வெளியீட்டில்வந்து 13—3—60ல் முடிவுற்றிருக்கிறது. நிலை பெறக் கூடிய ஒரு நல்ல முயற்சி என்பது என் எண்ணமாகும்.

இவைகள் மாத்திரமல்ல. இலக்கிய வழி, சைவ நற்சிந்தனைகள் என்ற பண்டித மணியின் நூல்களை வெளிவரச் செய்ய முயன்றிருக்கிறேன். மஹாகவியின் வள்ளி என்றகவிதைத் தொகுப்பு நூலையும், ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதி I யையும் வெளிவர என்னுலான உதவி செய்திருக்கிறேன்.

தனிப்பாடல் பலவற்றிற்கு நான் எழுதிய விமர்சனக் கட்டுரைகளையும் மத்தாப்பு என்ற குறுநாவலில் என்னுல் எழுதப்பட்ட 2ம் அத்தியாயத்தையும் பலர் பாராட்டியதோடு அவை நூல்களாக வரவேண்டும் என்றும் தூண்டுகிருர்கள்.

சிறுகதை ஆசிரியர்களோ நாவலாசிரியர்களோ எழுத்துலகில் நான் என்பதைப்பற்றி கதைகள் பிறந்த விதம், கட்டுக்கோப்பு, வாசகர்களிடம் பெற்ற மதிப்பு, என்பவற்றைச் சொல்லி நிறுத்திவிடலாம், சுருக்க

மாக. என் நிலையோ அப்படி அல்ல. சிறுகதை நாவல், கட்டுரை, அறிமுகம், விமர்சனம் நூல்கள் பாடபுத்தகங்கள் பிறமுயற்சிகள் என்று விரிந்து பரந்து கிடக்கின்றனவே.

ஒரு தமிழாசிரியன்—ஆங்கில அறிவே இல்லாதவன் எழுத்துலகில் புகுந்து என்ன சாதித்து விடமுடியும்? என்று தயங்கிய காலையில் உற்சாக மூட்டி என்னை அத்துறைக்குள் நுழைத்த சோ. சிவபாதசுந்தரம் எனக்குப் பல தடவை சொல்லிய வார்த்தைகள் இவை.

"எழுதுவதற்கு முன் பலதடவை ஆழ்ந்து சிந்தி. அவற்றைக் கோவையாக்கி மனதில் திடப்படுத்திக் கொள். எழுதத்தொடங்கியபின் கீருதே. முக்கியமாக முதலாவது வசனத்தை கீருதே. எழுதியது பிழை என்று உடனே கிழித்துஎறிந்து விடாதே. முழுவதையும் எழுதிமுடி. பிறகு உன்மனம் நிறைவாகும் வரை திருத்து."

எதை எழுதும் போதும் இதை நான் கவனத்தில் வைத்திருப்பது வழக்கம். சில விஷயங்களைப்பற்றி மாதத் கணக்காக, வருடக்கணக்காக யோசித்திருக்கிறேன். என்னுடைய இருபத்திரண்டு வருட இலக்கிய வாழ்க்கையில் தமிழ்ப்புத்தகங்களாக ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். பல ஆண்டு மலர்கள், விசேட வெளியீடுகளை வாங்கியிருக்கிறேன். ஒரு தமிழாசிரியன் தனது குடும்பத்தையே நடத்தமுடியாத நிலையில் இருக்கும்போது இவைகளை வாங்குவதும் சேமிப்பதும் மிகமிகக்கஷ்டமான காரியங்களாகும். அவற்றை வைத்துக் கொண்டு சராசரித் தமிழ் படித்த வாசகர்களுக்கு—படித்த பண்டிதவர்க்கத்துக்கல்ல—என்னுல் என்ன செய்யமுடியும் என்பதே என் சிந்தனை. இப்படிப் பல மாத சிந்தனையின் பின் ஏதாவது உருப்படியாகத் தோற்றும். அப்படித்தோற்றிய இரண்டு விஷயங்கள் 1. பாரதிக்குப் பின் கவிதை வளர்ச்சி (ஈழமும் தமிழ் நாடும்) 2. ஈழத்து வாசகர்கள் படிக்கவேண்டிய இருபத்தைந்து நூல்கள் (ஈழம்) என்பனவாகும் இவற்றைப்பற்றி இனிமேல் எழுத உத்தேசம். இவ்வளவையும் வாசித்த பின் என்னை எழுத்தாளன் என்று நீங்கள் ஒப்புக்கொள்ள வில்லையானல் ஒரு காரணம் தான் இருக்க முடியும். தமிழ் நாட்டுப் பத்திரிகை எதிலும் நான் ஒருவரி கூட எழுதியதில்லை. உண்மை. நம்பாவிட்டால் விடுங்கள்.



# வஞ்சம்

— இலங்கையர்கோன் —

நீரில் பால் கலப்பதுபோல, கழியும் இரவின் மையிருளில் உதயத்தின் வெண்மை பரவிக் கொண்டிருந்தது. நிலத்தில் சிதறிக்கிடக்கும் இலைகளின் மேல் பலாமரங்கள் சொரியும் பனித்துளிகளின் ஏகதாள சப்தம் அவ்வைகறையின் நிசப்தத்திற்குப் பங்கம் விளைவித்தது. அப் பனித்துளிகளின் குளிர்ந்த ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தே, அருங் கோடையின் காய்ச்சலினுல் உலர்ந்து குறுகிப்போய் இருந்த நிலம் ஒரு அற்புதமான மண் வாசனையைக் கக்கியது.

சிவஞானசுந்தரம் என்னும் பெயர்பூண்ட பழம்பெரும் எழுத்தாளர் ''இலங்கையர்கோன்'' தன் எழுத்துலக அனுபவங்களை ஏற்கனவே நமது வாசகர்கட்குக் கூறியுள்ளார். வவனியா தமிழ்ப் பகுதிக் காரியாதிகாரியாக (D. R. O) இப்போது கடமையாற்றுகின்றுர். நாடகங்கள் பல இலங்கை வானெலியில் ஒலிபரப்பாகின்றன. ''வஞ்சம்'' என்ற இக்கதை 1937-ம் ஆண்டு ''பாரத தேவி'' யில் வெளியானது.

பலாமரத்தின் கிளை ஒன்றில் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த புள்ளடியன் உறக்கம் கலைந்து, தன் வலப்புறச் சிறகிற்குள் புதைந்து கிடந்த தன் தலையை வெளியே இழுத்து சுற்றும் முற்றும் பார்த்தது. ‘என்ன, இரவின் கரும்போர்வை அகன்றுவிட்டதா? சரிதான், இந்தப் பனிக் குளிரில் நேரம் போவதே தெரியவில்லை...’

அந்த வைகறைப் பொழுது உயிர்த்த ஜீவசக்தி புள்ளடியனுடைய வக்கரித்த நரம்புகளிலும் பாய்ந்து, அதற்கு உயிர் வாழ்வதில் ஒரு புது ஆசையையும் ஊக்கத்தையும் கொடுத்தது. உயிர் வாழ்வதே ஒரு பெரிய இன்பம்! தினமும் வைகறையில் கண்விழித்து எழும் பொழுது தன் உடலில் இன்னும் ஜீவன் குமுறிக் கொண்டிருந்தது என்ற உணர்ச்சியே புள்ளடியனுக்குப் புளகாங்கிதம் உண்டாக்கிற்று.

வாழ்க்கையில் என்ன குறை? எதற்காக ஏங்கி அழவேண்டும்? வாழ்க்கையின் கோர உருவம் புள்ளடியன் கண்களில் இதுவரை படவில்லை. அந்தக் கோர உருவத்திற்கு ஒரு உறுத்தும் விஷக்கொடுக்கு இருக்கிறதென்பது புள்ளடியனுக்கு இதுவரை தெரியாது.

ஏன் தெரியப் போகிறது? அதன் ஐந்துவருட வாழ்வு பூரா

விலும் அது கவலைப்பட்டதில்லை. ஆசைகள் நிராசையாகவில்லை. வேண்டியதெல்லாம் வேண்டியபடியே கிடைத்து வந்தது. உண்பதற்குக் கறகறப்பான நெல், கிளறுவதற்கு உபயோகமான குப்பை மேடு, சுகிப்பதற்கு நல்ல அழகான தடித்த பேடைகள்...!

புள்ளடியன் தன் சிறகுகளைப் பட பட என்று அடித்து தலையை உயரத் தூக்கி, பல நாளைய அனுபவத்தால் விளைந்த ஒரு அலட்சியத்தோடு, தன் பரம்பரைப் பல்லவியைப் பாடியது. 'கொக்கரக்கோ...ஓ...ஓ'

திடீரென்று அந்த வட்டாரமே சிலிர்த்துக் கனைத்துக்கொண்டு எழுந்தது போன்ற ஒரு பரபரப்பு காணப்பட்டது. பனையோலைக் "கடகங்களை" தலைமேல் சுமந்துகொண்டு பனங்காய் பொறுக்கப் போகும் சிறுவர் சிறுமியர்; கலப்பை சகிதமாக உழவு மாடுகளை ஓட்டிக்கொண்டு வயலிற்குச் செல்லும் குடியானவன்; அழுக்கு மூட்டைகளைத் தோளில் சுமந்துகொண்டு குளக்கரை செல்லும் சலவைத் தொழிலாளி.

பொழுது நன்ருகப் புலர்ந்துவிட்டது. புள்ளடியனும் மற்றக் கோழிகளும் மரங்களை விட்டிறங்கின.

அந்த வளவில் வளர்ந்து வந்த பத்துப் பன்னிரண்டு பெட்டைக் கோழிகளுக்கு புள்ளடியன் ஒரு தனி நாயகன் மாதிரி. மகாராஜாக்களைப் போல புள்ளடியனுடைய மோகமும் எல்லையற்று இருந்தது. பெண் பித்து! மகாராஜாக்களுக்கு இருப்பது போலவே புள்ளடியனுக்கும் ஒரு பட்டமகிஷி இருந்தாள் — தூய வெள்ளை நிறம் பொருந்திய தடித்த ஒரு பேடை.

இந்தப் பேடையிடத்தில் புள்ளடியனுக்கு ஒரு தனிப் பிரேமை, ஒரு தனி அருள். முட்டையிட்டு அடைகாக்கும் நேரம் தவிர, மற்றப்படி இரண்டும் சதா ஒருமித்தே இருக்கும்.

புள்ளடியனுக்கு ஐந்து வயதாகிறது. முன்னிருந்த துடிதுடிப்பு இப்பொழுது இல்லைத்தான். வீர்யமும் தளர்ந்துபோய் விட்டது. ஆனுல் வெள்ளைப் பேடையின் மேல் இருந்த மோகம் மட்டும் சிறிதும் குறையவில்லை. அன்னியன் ஒருவனுடைய பார்வை பேடையின்மேல் விழுந்தால் — விழுந்துதான் பார்க்கட்டுமே!

**அ**ன்று காலையில்தான் அடுத்த வளவிற்கு ஒரு புதுச் சேவல் வந்திருந்தது. அதன் நிறமும் வெள்ளை. பார்ப்பதற்கு ரொம்ப அழகாக இருந்தது. கழுத்தடியில் விரிந்து சடைத்த இறகுகள், பூம்பந்தல் போல் அகன்று பரந்த வால், தலையிலும்தாடையிலும் ரத்தம்தெறித்துக்கொண்டிருந்த சூடுகள்!

அதன் நடையிலே ஒரு தனி ராஜகம்பீரம் தொனித்தது.

அதன் இளமை இப்போது தான் பூரண மலர்ச்சி பெற்றிருந்தது. அந்தப் பூரண மலர்ச்சி அதற்கு வேதனையையே கொடுத்தது. அதன் கனவுகளை யும் நினைவுகளையும் தேக்கிக் கொண்டு நின்ற ஒரு ஆசை, பேடைக்குலம் முழுவதையுமே சுட்டெரித்து பஸ்மமாக்கி விடுவது போல் இருந்தது.

அன்று வந்ததும் வராததுமாக அது வேலியில் உள்ள துவாரத்தின் வழியாக மறுபுறம் எட்டிப்பார்த்தது. குப்பை கிளறிக் கொண்டிருந்த வெள்ளைப் பேடையைக் கண்டு விட்டது.

இரண்டு நாளாகப் பட்டினி கிடந்தவன் அறுசுவை உண்டியைக் கண்டதுபோல் இருந்தது அதற்கு. பேடையின் வாசனை என்பதே அறியாமல் ஒரு பகலும் இரவும் கோழிக்கார சாய்புவின் கூடைக்குள் அடைபட்டுக் கிடந்த பிறகு இந்த மனோகரமான காட்சி! ஆ! அதன் நரம்புகள் ஒவ்வொன்றும் விண் பூட்டி இழுப்பதுபோல் தெறித்தன.

மறுகணம் வேலியைத் தாண்டி மறுபக்கத்தில் குதித்தது. அப்பொழுதுதான் வெள்ளைப் பேடை தனியாக இல்லை என்பது அதன் கண்களில் பட்டது. பேடையை அணுகிவிட வேண்டுமென்ற ஆசை தடைப்பட்டு அவ்விடத்திலேயே ஒரு ஏக்கப் பார்வையோடு நின்றுவிட்டது.

இந்தச் சச்சரவைக் கேட்ட வெள்ளைப்பேடும் குப்பை கிளறும் வேலையை நிறுத்திவிட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தது. கோழிக் குலத்தின் மன்மதன்போல் நின்றிருந்த புதுச்சேவல் அவளுடைய மனதில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. யார் இது? புது ஆசாமி. ஆனால், என்ன அழகு! என்ன நிறம்! என்ன கம்பீரம்! எங்கிருந்து, எப்பொழுது, ஏன் வந்தான்?

அவள் இதுவரை புள்ளடியனுடைய தனி ஆட்சிக்கு உட்பட்டிருந்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அந்த வட்டாரத்தில் புள்ளடியனைத் தவிர வேறு சேவலே கிடையாது. 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை'. புள்ளடியன் மூப்படைந்து பலம் குன்றி இருந்தாலும் சேவல் சேவல் தானே!

ஆனால் இன்று அவளுடைய கனவுகளை வடித்துப் பிழிந்து எடுத்த ரூபம் போல் நின்றிருந்த புதுச் சேவலைக் கண்டதும் அவளுக்கு உண்மையாகவே தலை கிறுக்கிவிட்டது.

பேடையின் கவனம் அலைந்ததைக் கண்ட புள்ளடியனும்

தலை நிமிர்ந்து பார்த்தது. ஆகா, அப்படியா சங்கதி?

பேடையைக் கண்டிப்பது போல, புள்ளடியன் ஒரு தரம் கொக்கரித்தது. அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட பேடை, 'பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்து மறுபடி குப்பை கிளறும் வேலையில் ஈடுபட்டது.

இப்பொழுது ஆகக்கூடிய காரியம் ஒன்றும் இல்லை என்று புதுச் சேவலுக்குப் பட்டுவிட்டது. "இன்று மத்தியானம் எப்படியும்..." என்று நினைத்து வேறு பக்கமாகத் திரும்பி நடந்தது.

மத்தியான வெயில் யுகாந்த காலாக்கினி போல் எரிந்து கொண்டிருந்தது. தொலைவில் கானலின் தக தக என்ற மிதப்பு. மர நுனிகள் காற்றில் சற்றே அசைந்தன.

கோழிகள் எல்லாம் ஒரு மாதுள மரத்தின்கீழ் தம்இறகுகளைத் கோதிக்கொண்டு படுத்திருந்தன. அந்த உக்கிரமான வெயில் அவற்றின் பரபரப்பை அடக்கிவிட்டது.

புள்ளடியனுக்குப் பலத்த யோசனை. "அட இவன் எங்கிருந்து வந்தான்? யாரைத் தேடி?"

மயிர்ப்புழு ஒன்று மாதுள மரத்தின் கிளையொன்றில் இருந்து கொடிவிட்டு, புள்ளடியனின் தலைக்கு மேலாக இறங்கிக்கொண்டிருந்தது. அதைக் கண்ட புள்ளடியன் 'லபக்' அதைத் தன் அலகுகளில் கௌவிக் கொண்டது. கிட்டவந்ததை விட்டுவிட்டால்......!

மறுபடியும் அந்தப் புதுச் சேவலைப்பற்றிய யோசனை. "காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்தவன் கொண்டு போவதா?...... ஆனால் எங்கே வெள்ளைப் பேடை?" புள்ளடியன் சுற்றுமுற்றும் பார்த்தது. அதைக் காணவில்லை.

உடனே புள்ளடியனுக்கு விளங்கிவிட்டது. தூ! என்ன பெண்குலம்! இப்படியுமா?

புள்ளடியன் வயதடைந்து உதவாக் கரையாகிப் போய் விட்டது உண்மைதான். அதற்காக இப்படி நட்டாற்றில் கைவிட்டு நேற்று முளைத்த அற்பனோடு......! போகிறாள். எப்படியும்......!

ஆனால்......!

புள்ளடியன் விரைவாக எழுந்து குப்பை மேட்டை நோக்கி ஓட்டம் பிடித்தது. வெள்ளைப்பேடும் புதுச் சேவலும் ஒன்றாக நின்று குப்பை கிளறின. அவை இரண்டினது போக்கிலும் ஒரு உல்லாசம், ஒரு திருப்தி, ஒரு ஆனந்தம் காணப்பட்டது.

அவள் போகிருள் எப்படியும். ஆனுல் புள்ளடியனுடைய அவமதிக்கப்பட்ட ஆண்மை! அதைக் காப்பாற்ற வேண்டாமா? அதுவும் ஒரு குலம் கோத்திரம் இல்லாத பதரினுல்..!

கணப்பொழுதில், மங்கல் நிறமாக இருந்த புள்ளடியனுடைய சூடுகள் ரத்தமேறிச் செக்கச் செவேல் என்று சிவந்து விட்டன. அதன் கழுத்தில் இருந்த ரோமங்கள் குத்திட்டு நின்றன. சிறகுகளைப் பலமாக அடித்துக் கொண்டு ஒரு பயங்கரமான கொக்கரிப்போடு புதுச் சேவலை நோக்கிப் பாய்ந்தது. புதுச் சேவலும் தயாராகவே நின்றது.

புள்ளடியன் விட்டுக்கொடுக்கவில்லை. "உயிர் போனுல் போகட்டும்."

திடீரென்று புள்ளடியனுக்கு உலகமெல்லாம் இருண்டு போனதுபோல் காணப்பட்டது. ஒன்றும் தெரியவில்லை. தன் கழுத்திலும் முகத்திலும் வேகமாக விழும் கூர்மையான கொத்துகள்தான் அதற்குத் தெரிந்தது.

மறுகணம் அதை யாரோ கைகளால் தூக்கி எடுப்பது போல் இருந்தது. தன் எஜமானுன கமக்காரன் கைகள் தான்.

எஜமானனுடைய குரல் இரக்கத்தினுல் குழைந்து இருந்தது.

"அட சீ! இந்தக் கிழட்டு வயதில்கூட உனக்குப் பொம்பிளை ஆசை விடவில்லையே. வீணுக சண்டை பிடிச்சு உன் கண்களைக் கெடுத்துக் கொண்டாயே! நீதான் என்ன செய்வாய், பாவம்! அவள் கொழுத்த குமரி தா!"


ஸ்ரீ இந்திரா ஸ்ரோஸ், சுன்னுகம்.

**புகையிலை, வெங்காயம், வீட்றூட் முதலிய பயிர்கட்கு விசேஷ பசளை பேரர் அண்ட் கம்பனி தயாரிப்பு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

**ஸ்ரீ இந்திரா ஸ்ரோஸ்**

காங்கேசன்துறை வீதி, சுன்னுகம்.

ரெலிபோன் நம்: 94.

(16 ம் பக்கத் தொடர்ச்சி)

டம்மாள். அவர்களுக்குக் குழந்தைகளுமுண்டு. இப்பொழுதெல்லாம் அகிலனுக்கு யாராவது கடிதம் எழுதினுல் அவர் மகன் கண்ணன்தான் பதிலெழுதுகின்ருர்.

கே, கமலா, ரைப்பிங் மலேயா.

கே. யாழ்ப்பாணத்து மாணவர்களைப் பற்றிச் சிறிது கூறுவீர்களா?

ப: காலையில் 7-45 க்கு எழுந்துவிடுகின்ருர்கள் — திரை இசையுடன். இரவில் 10-30 க்கு முன் படுக்கைக்குப் போவதில்லை — வானொலியில் நேயர்விருப்பம் அப்போதுதான் முடிவடைகின்றது! அடிக்கடி சினிமாவுக்குச் செல்வார்கள். அரசியல் கூட்டங்களுக்கும் செல்வார்கள் — கேள்வி கேட்க. எப்போதாவது வகுப்பறை அமைதியாயிருந்தால், கலை, பேசும் படம், இந்துநேசன் முதலானவை வெளிவந்துவிட்டதென்று அர்த்தம். பாடப் புத்தகங்களுக்குள் மறைந்திருக்கும் இப் பத்திரிகைகள் மாணவர்களின் 'ஐம்புலன்'களையும் கவர்ந்திழுக்கும். உடற்சுகத்திற்காக, சிலர் மது அருந்துவதும் உண்டு— உடற்சுகத்திற்காகத்தான்! கல்வியா? அதைப்பற்றிக் கேட்காதீர்கள்— காரம் குணம், மணம் நிறைந்த திறமான 'பொலிடோல்" இங்கு மலிவு!

அ. சின்னராசா, அச்சுவேலி.

கே: யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் 'ஆனந்தவிகடனி'ல் இப்பொழுது தொடர்கதை எழுதி வருகின்ருர், தெரியுமா?

ப: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர் திரு. சேவற்கொடியோன் அவர்களைத்தானே குறிப்பிடுகின்றீர்கள்! தவறு. 'ஆனந்தவிகடனி'ல் கதை எழுதுபவர் ஜெமினி அதிபர் திரு. எஸ். எஸ். வாசன் அவர்களின் மகன். சொந்தப் பெயர் திரு. பாலசுப்பிரமணியம்.

பொ. சரோஜினிதேவி, நிலாவரை.

கே: கலைச்செல்வி காரியாலயத்தில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் தங்களுக்கு எவ்வளவு சம்பளம் தருகிருர்கள்?

ப: உஷ்! வலக்கை வாங்குவதை இடக்கை அறியக்கூடாது என்ற கொள்கையுடையவன் நான்.

க. சுப்பிரமணியம், களபூமி.

கே: அமிழ்தினும் இனியது எது?

ப. அன்பு என்பர் அறவோர்; அன்னை மொழி என்பர் அறிஞர். அருமைக் காதலியின் அதரங்கள் என்பேன் அடியேன்!

மஞ்சரி, அளவெட்டி.

கே. தற்காலப் பெண்கள் நாகரிகத்தால் கெட்டுப் போகிருர்கள் என்கிருர்களே, பழங்காலப் பெண்களெல்லாம் கற்பரசிகளாகத்தான் இருந்தார்களா?

ப. எல்லோருமே கற்பரசிகளாக இல்லாவிட்டாலும், சந்திரமதி, சீதை கண்ணகி, காரைக்காலம்மையார், நளாயினி, தமயந்தி முதலியோருக்கு கற்பின் செல்விகள் என்பதற்காகத்தான் நாம் மதிப்புக் கொடுக்கின்ரேம். ஆனுல் இன்று...? புருஷரைக் கொல்லும் பூவையரையும் பொலிடோல் பரு(க்)கும் பெண்களையும்தானே காண்கின்ரேம்!

ஜரா, யாழ்ப்பாணம்.

கே. ஒரு ஆடவன் எத்தகைய பெண்ணையும் பெண் எத்தகைய ஆணையும் விரும்புவார்கள்?

ப. "எங்கள் வீட்டு மஹாலக்ஷ்மி" என்று சொல்லிப் பெருமைப்படக் கூடிய பெண்ணை ஆண் விரும்புவான். கை நிறைந்த— "கண் நிறை

ந்த கணவனை" ப் பெண் விரும்பு வாள்.

வண்ணக்கிளி, வட்டுக்கோட்டை,

கே. "குறிஞ்சி மலர்" படிக்கின் றீர்களா? மணிவண்ணன் யார்?

ப. ஒவ்வொரு வாரமும் தவறாது வாசித்து வருகின்றேன். பாத்திரங் கள் அறிமுகமாகும் விதம் ரொம்ப அருமையாக இருக்கின்றது. நாவ லாசிரியர் மணிவண்ணன், நண்பர் திரு. நா. பார்த்தசாரதியாக இருக்க லாம்.

குறிப்பு:— கேள்வி அனுப்புபவர் கள் தங்கள் பெயர், முகவரி ஆகிய வற்றைத் தெளிவாக அஞ்சலட்டையில் எழுதி, கீழேயுள்ள முகவரியை ஒட்டி அனுப்புதல் வேண்டும். சிறந்த கேள் விக்கு இரண்டு ரூபா பரிசு உண்டு. இம்மாதம் பரிசு பெறுபவர் செல்வி. கே. கமலா மலேயா. வெளிநாட்டிற் குப் பணம் அனுப்புவதில் கஷ்டம் ஏற்படுமாதலால், 2/- ரூபா பெறுமதி யான அறிவு நூல்கள் அவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

**தாண்டவக்கோன்**

மே/பா கலைச்செல்வி

சுன்னாகம்.

## "எழுத்து" ம் "கலைச்செல்வி" யும்.

எழுத்தாளர்களுக்காக எழுத் தாளர்களாலே நடாத்தப்படும் பத்திரிகை "எழுத்து". சென் னையிலிருந்து ஒவ்வொரு மாத மும் வெளியாகின்றது. பிரபல எழுத்தாளர் திரு. சி. சு. செல் லப்பா அவர்கள் இதன் ஆசிரி யராயுள்ளார். "எழுத்து" சித் திரை இதழில் நமது "கலைச் செல்வி பற்றிக் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "தமி ழகத்தைவிட இலக்கிய அக் கறை கொண்ட பத்திரிகைகள் கூடுதலாகவே இலங்கையில் உள்ளன. அவைகளில் ஓராண்டு முற்றுப்பெற்றுள்ள **கலைச் செல்வி** ஒன்று. ஆண்டு மலர் இலக்கியத் தரமாக இருக்கின் றது. சம்பந்தன் கதை 'சபலம்' சி. வைத்திலிங்கம் கட்டுரை "எழுத்துலகில் நான் ஈழத் துச் சோமு கட்டுரை, 'மார்ச் மாத சிறுகதைகள்' விமர்சன முயற்சி குறிப்பிடத் தக்கவை."

நண்பர் ஈழத்துச்சோமு அவர்களின் கட்டுரையையும் மறுபிரசுரஞ் செய்திருக்கிறது.

"எழுத்து" இதழின் முக வரி இது "எழுத்து" 19-A பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

---

"நீர்வை பொன்னையன்" எழுதும்

# மேடும் பள்ளமும்

என்ற சிறுகதை அடுத்த இதழில் வெளியாகின்றது.



# வாழ்த்துகின்றோம்!

*

நடிகர் திலகமே! நாம் பூரிப்டைகின்றோம். செந்தமிழ்த் திரையின் நந்தா விளக்கே! சித்தம் மகிழ்ந்து உம்மை நத்தம் வாழ்த்துகின்றோம்.

ஆசிய—ஆபிரிக்காவின் தலைசிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எமதருமைக் கணேசரே! இந்தக் கௌரவத்தைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை; அதிசயப்படவில்லை; ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்தியிருக்கிறோம்.

கண்காணுக் கடவுளுக்கு எத்தனையோ பெயர்கள்! கண் கண்ட கணேசரே! உங்களுக்கும் அப்படித்தான்.

சிவாஜி கணேசன்; பராசக்தி கணேசன்; மனோகரா கணேசன்; பாரதி கணேசன்; காத்தவராயன் கணேசன்; கட்டபொம்மன் கணேசன்;

இவற்றுள் ஒன்றே ஒன்று என்றும் மறக்காது. அதுதான் ‘சிவாஜி கணேசன்’ என்ற சிறப்புப் பெயர்; செல்லப்பெயர்.

தமிழ்த்தாய் தியாக சிந்தை நிறைந்தவள். வள்ளுவரைப் பெற்ற அவள், மடியில் கட்டி மறைத்து வளர்க்கவில்லை; வையத்தின் பொதுச்சொத்தாக்கினாள்; உலக மகாகவியாக்கினாள்.

உலகப் பொது நடிகனாகிப் புகழும் பெருமையும் அடையும்படி உங்களை இன்று ஆசீர்வதிக்கின்றாள்.

கட்டப்பொம்மனாகிக் கைரோவிற்குச் சென்றீர்கள்!
சிவாஜியாகி இந்தச் செகம் முழுதும் பவனி வாருங்கள்!!

## 5 வயதுக் குழந்தை அறிவு ஏட்டிலிருந்து போதிக்கின்றது.

1. உண்மையே பேசு, நன்மையே பெறுவாய்.
2. நீதி நெறி நில்
3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
4. அன்பினால் உலகினை ஆளலாம்.
5. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.
6. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு.
7. நன்றி மறப்பது நன்றன்று.
8. கீழோராயினும் தாழ உரை.
9. கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை.
10. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுகும்.
11. உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசாதே.
12. எல்லோர்க்கும் இரங்கு.

## 50 வயதுக் குழந்தை அநுபவ ஏட்டிலிருந்து படிக்கின்றது.

1. உண்மையை மறைத்தால் உலகத்தில் வாழலாம்.
2. நீ தீநெறி நில்.
3. பிரிந்து வாழ்தலே பெரும் பேரின்பம்.
4. அடியினால் உலகிலே வாழலாம்.
5. செல்வம் என்பது சுரண்டிப் பிழைத்தல்.
6. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தம்மகட்குச் சீதனம் கொடுத்தற்பொருட்டு.
7. நன்றி மறப்பது நஷ்டமன்று.
8. யாரென்றாலும் அதட்டிப் பேசு.
9. கற்பெனப் படுவது கணவனைக் கடி(த்)தல்.
10. அரசியல் பிழைத்தோர்க்கு அறமும் அஞ்சும்.
11. உள்ளதைச் சொன்னால் உதைதான் கிடைக்கும்.
12. ஏய்த்துப் பிழை; ஏசிப் பிழை.

# விமோசனம்

— உதயணன் —

அவனுக்குப் பெயர் செல்வராசா !

எல்லோருடைய வாழ்க்கையும் அவரவரின் பெயரின் பொருளுக்கமைய இருப்பதாயின், நல்ல நல்ல பெயர்களை வினியோகம்செய்ய வியாபார நிலையங்கள் தோன்றியிருக்கும். ஆனால் முன்னதும் இல்லை; அதனால் பின்னதும் இல்லை.

மழை பெய்தால் அந்த நீர் பூமாதின் மடியில் இறங்கிவிடுகிறது; சமுத்திரத்தின் வயிற்றில் கலந்துவிடுகின்றது. செல்வராசா கொட்டிய கண்ணீர் வெள்ளம் யார்மடியில் சேர்ந்தது? ஆமாம் அவனுடைய வாழ்க்கை கரைந்து கொண்டிருந்தது—கண்ணீ ரரக!

அவன் நம்பிக்கையோடு இருந்தான், என்றுவது ஒருநாள் நல்ல காலம் வருமென்று. சோதனையும் வேதனையும் துயரும் துன்பமும் கைகோர்த்துக் கொண்டு வந்தனவே தவிர, எதிர் பார்த்தது வரவில்லை.

இத்தனை நாட்களும் எத்தனையோ கஷ்டங்களை எதிர்த்து நின்றான். மனைவி பார்வதியின் பக்கத் துணையோடு! பார்வதியின் அன்பு என்பது வெறும் பிரமை என்று இன்று அவன் எண்ணி விட்டபிறகு அவனுக்கு எல்லாமே சூனியமாகி விட்டது.

அதனால்—

அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். மழலைபேசும் மைந்தனை விட்டு, மனதுக்கினியவள் என்று எண்ணியிருந்த மனைவியைவிட்டு, வெறும் சம்பிரதாயத்துக்கும் வரட்டுக் கௌரவத்துக்கும் வளைந்து கொடுக்கும் வகைகெட்ட சமுதாயத்தை விட்டு, மூடப் பழக்கவழக்கம் முட்டிக்கொண்டு நிற்கும் ஊரைவிட்டுப் போய்விடத் தீர்மானித்து விட்டான்.

அவன் எங்கே போகிறான்? ஏன் போகிறான்? எதற்காகப் போகிறான்?

அவன் எங்கோ போகிறான்.



ஏனோ போகிறான். எதற்கோ போகிறான்.

ஒரு கேள்வி எழுந்தது.

"நான் ஊரைவிட்டு ஓடிவிட்டால் பார்வதியின்கதி? அவளுடைய வாழ்வு?"

அதற்கு விடையும் கிடைத்தது.

"எனது கை முறிந்ததற்கு நட்டஈடாகக் கிடைக்கும் ஐயாயிரம் ரூபாச் செக் வந்ததும், அதில் கையெழுத்து வைத்துவிட்டுப் போனால் — போனால்?"

முத்து முத்தாக வெயர்த்தது. முகத்தை மூடிக்கொண்டு படுத்துவிட்டான். பொழுது விடியட்டும்.........

❀ ❀ ❀

தாரியன்பைத் தரணியெல்லாம் திரண்டு போற்றுகிறதே, அது எப்படி இருக்கும்?. செல்வராசாவுக்குத் தெரியாது. மாதாவின் முகம் கறுப்பா சிவப்பா என்றே அவனுக்குத் தெரியாது. பிறந்த சில மாதங்களில் அன்னையை 'விழுங்கி' விட்டான்.

அண்ணன் உண்டு, தம்பி உண்டு, அக்கா தங்கை உண்டுஎன்று சொன்னாலே தோளில் ஒரு பலம் ஏறுமாமே. அவனுக்கு அந்தப்பக்கமும் பூஜ்ஜியம். அவன் தனியன்.

அவ்வளவேன்? இத்தனை துர்ப்பாக்கியசாலியான அவனுக்கு ஆறுதல் கூற, அன்புகாட்ட பெற்ற பிதாவென்றாலும் இருக்க வேண்டியது தானே நியாயம். யாரிடம் போய் நியாயம் கேட்பது?

அவனுக்குத் துணை?

மாமா இருக்கிறார்!

என்னவோ விட்ட குறை தொட்ட குறை என்பார்களே, அதுவாகத் தான் இருக்க வேண்டும் அவர் அவனை வளர்க்கவேண்டிய — அவன் அவரிடம் வளர வேண்டிய சூழல் ஏற்பட்டது. அவர் அவனை மருமகன் என்று சொல்லப்போய்த்தான், அவனுக்கு அவரை மாமா என்று தெரிய வந்தது. அந்தவரை தான் அவர்கள் உறவு.

வீட்டிலே அரிசி இடிப்பதுமுதல் மிளகாய் அரைப்பது வரை வெளியிலே மாமாவுக்கு சாப்பாடு தூக்குவது முதல் தோட்டம் கொத்துவது வரை செய்த பின்னர், அவன்படித்த படிப்பு எட்டாம் வகுப்புக்கே போதியதாக இருந்தது.

ஒன்று!

அவன் கொஞ்சக்காலம் தட்டச்சுப் பயின்றான். அவனுடைய மூளையும் அறிவும அவனுடன் ஒத்துழைக்க மறுத்த போதிலும், உற்றம் சுற்றம் என்று உறவு கொண்டாடி உறு துணை செய்ய யாரும் இல்லாத போதிலும் பழக்கப்பட்ட துறையில் நின்று உதவ அந்த ஜீவனற்ற வெறும் இரும்பு யந்திரமும் அவனது பத்துவிரல்களும் தயாராக இருந்தன.

அவன் கொழும்புக்குப் போனான்.

ஒரு 'டைப்பிஸ்ட்'டானான்.

மாதா மாதம் கொழும்புப் போலி வாழ்வுக்குப் பலியாக அள்ளிக்கொட்டியது போக, ஏதோ இரண்டொரு ரூபாவை மிச்சம்பிடிக்கவும் செய்தான் என்றால் யாரும் நம்பமாட்டார்கள். உண்மையும் அதுதான். அவன் அப்படிச் செய்யவில்லை. செய்ய முடியவில்லை.

முதலாம் திகதியைக் கற்பனை பண்ணிக்கொண்டு முப்பது நாட்களுக்கு மூச்சைப்பிடித்து உழைத்தால் முப்பது ஐந்து ரூபாக்கள் கிடைக்கும். அந்தப் பணத்தைப் பங்கீடு செய்து

அன்ருட வாழ்வுக்குத் தேவைப்பட்ட அத்தனை பேருக்கும் அர்ச்சனைசெய்து விட்டு எஞ்சியதை மரியாதையாக மாமாவுக்கு அனுப்பி விடுவான். இப் படியாக வழக்கம்போல இந்தச் சோகக் கட்டம் வந்து—

கொழும்பில் அவன் வாழ்ந்த லட்சணத்தை அவனுடைய மாமன் மாமியோ கிராமத்து மக்களோ அறிந் திருக்க நியாயம் இல்லை. என்னவோ உத்தியோகம் என்று சட்டையை மாட்டிக்கொண்டு கொழும்புக்கு வந்துவிட்டால், கொழும்பு ராச்சியத் தில் பாதியை எழுதித் தந்துவிடு வார்கள் என்ற நினைவு அவர்களுக்கு!

ஒருநாள் மாமாவுக்கு ஆபத்து என்று தந்தி வந்தது. செல்வராசா ஓடிப்போனுன்.

தந்தி வந்துவிட்டால் யாருக்கு என்னவோ ஏதோ என்று ஏங்கிப் போகும் காலம் ஒன்று இருந்தது. ஆனல் இன்றைக்கு அலுவலகத்தில் லீவு எடுக்கச் சிரமமாக இருந்தால் யாருக்காவது சுகமில்லை யென்று தந்தி அடிக்கும்படி பிள்ளைகளே எழுதிவிடுகிருர்கள். இங்கும் அவன் கற்றுக்கொடுத்ததை மாமா செய்தார்; அவ்வளவுதான்.

அங்கே மாமா சுகமே இருந்தார். அவனுக்கு ஒரு கல்யாணம் ஒழுங்கு செய்திருந்தார்கள்.........

மாமாவின் கூட்டில் குயில் குஞ் சாக அவன் வளர்ந்த போதிலும், வயது வந்ததும் அவர் இப்படிக்கொத் தித் துரத்தக் காரணமில்லை. அவன் கல்யாணம் செய்யாமல் இருந்தால் ஆயுள் உள்ளவரை அவருக்கு உழைத் துப் போட்டிருப்பானே! ஒருவேளை, ஏதாவது மொத்தலாபம் கருதி 'தரகு வியாபாரம்' செய்திருப்பாரோ?

இந்த டைப்பிஸ்ட் உத்தியோ கத்துக்கு அவன் சென்ற பொழுது என்னென்ன கேள்விகள் கேட்டார் களோ, அத்தனை கேள்விகளையும் இங்கே கணவன் உத்தியோகம் தர இருந்த பெண் வீட்டாரும் கேட்டார் கள். ஆனல், இவர்கள் 'உனக்கு இந்த 'உத்தியோகத்தி"ல் எத்தனை வருட முன் அனுபவம் உண்டு' என்று மட்டும் கேட்கவில்லை; நல்ல வேளை!

அவனுக்கு அப்பொழுது விவா கம் செய்துகொள்ளத் தோன்றவில்லை. முடிந்தவரை சொல்லிப் பார்த்தான். யாரும் கேட்பதாக இல்லை. அவனை வளர்த்து ஆளாக்கிய மாமா அவனை நம்பிக் கொடுத்த வாக்கைக் காப் பாற்ற முடியாமல் கவலைப்படும் ஒரு காட்சியை அவனே திரை நீக்கம் செய்துவைக்க அவன் விரும்பவில்லை. நிலையை அவருக்கு விளக்கமாக எடுத் துச் சொன்னுன்.

"நாங்கள் ஆளடுக்கில்லாதவர் கள். பெண் பகுதி பெரிய இடம். பெண்ணுடைய உறவினர் எல்லோ ரும் நல்லநிலையில் இருக்கிருர்கள். ஒரு காலத்தில் நீ விழுந்துவிட்டா லும் தூக்கிவிடக் கூடியவர்கள். இது போன்ற ஒரு கல்யாணம் தவறிப் போனல் உனது நிலைக்கு நீ கல்யா ணமே செய்துகொள்ள முடியாது" என்று மாமா மறுத்துரைத்தார்.

செல்வராசா சிரமசைத்தான். பார்வதி தாரமானுள். ஆனல் பார மாக இல்லை. அவன் எதிர்பார்த்ததை விட பார்வதி திறமைசாலியாக இருந் ததால் ஆங்காங்கு ஏற்பட்ட சில நெளிவு சுளிவுகளைச் சமாளித்து அவ னுக்கு ஆறுதலைத் தந்தாள். திறமை சாலியா? அப்படியென்ருல்? பூ! வல் லமையாகத் திருடுபவனைக் கூடத் தான், பிடிபடாமல் கொலை செய்ப வனைக் கூடத்தான் திறமைசாலி என் கிருர்கள்.........

அவன் சிறு வருவாய் உள்ள தொழிலில் இருந்தபோதிலும் பார்

வதியை எந்தக் கட்டத்திலாவது மனம்குமைய விட்டதில்லை; மனங் கோண நடந்ததில்லை. பிதாவாக இருந்துபுத்திமதி சொன்னான். மாதா வாக இருந்து அன்பு காட்டினான். சகோதரமாக இருந்து சரீர உதவி புரிந்தான். கணவனாக இருந்து சக லதும் செய்தான். அவன் அவளில் வைத்திருந்த அன்பை சாதாரண மாக பிரியம், வாஞ்சை, பாசம் என் றெல்லாம் சிறுவார்த்தைகளால் அளவுபோட முடியாது. ஏதாவது 'கன' மான சொற்கள் வேண்டும். அதன் பிரதிபலிப்பை அவன் உள் ளத்தில் கண்டான். களித்தான்.

அது ஒரு காலம்!

அன்று அவன் வேலை பார்த் துக்கொண்டிருக்கும் பொழுது அலுவலகக் கட்டடம் தீப்பிடித்துக் கொண்டுவிட்டது. அலறித் துடித்துக் கொண்டு ஓடினான்.

நிமிஷத்துக்கு நிமிஷம் நரக வாழ்க்கை நடத்துபவனுக்குக் கூட இந்தத் பாழ்பட்ட உயிரில் எத்தனை ஆசை இருக்கிறது.

எப்படியாவது உயிரைக் காப் பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற கொள்ளை ஆசையில் தீச்சுவாலையைத் தழுவிக்கொள்ளப் பயந்து மேல்மாடி யில் இருந்து கீழே குதித்துவிட்டான்.

மனச்சாட்சியில்லாத மனிதன் துன்புறுத்தினால் ஆண்டவனைப் பிரார்த்தித்து முறையிடலாம். ஆண் டவனே வருத்தினால் யாரிடம் போய் சொல்லி அழுவது?

கீழே விழுந்த அவனுடைய கை முறிந்துவிட்டது. முன்கையை முழங் கை அளவில் கழற்றிவிட்டார்கள். இரண்டு கைகளும் நல்ல நிலையில் உள்ள எத்தனையோபேர் வாழ முடி யாமல் தவிக்கும் ஈழமணித்திருநாட் டில் அவனுக்கு—ஒரு டைப்பிஸ்டுக்கு —ஒரு கை இல்லையென்றால் எங்கே இருக்கிறது பிழைப்பு? எங்கே இருக் கிறது வாழ்வு?

ஆஸ்பத்திரி வாழ்க்கை ஒன்றரை மாதமும் அவனுக்குப் போதும் போது மென்றாகிவிட்டது. கையில் காயம் ஆறுமுன்னரே பிடிவாதமாக வெளி யேறி வீட்டுக்கு வந்தான்.

ஏன்?

யாராவது சிந்தித்ததுண்டா?

ஒரு கைக்குழந்தையுடன் பார் வதி வீட்டில் படும் கஷ்டம் போதா தென்று காலையிலும் மாலையிலும் ஆஸ்பத்திரிக்கு வேறு நடை பயில வேண்டுமா? அவளுடைய சுமை யைக் குறைத்து அவளுக்கு ஆறுதல் அளிக்க எண்ணினான்.

தன் தலைவிதி தன்னை ஒற்றைக் கையனாக்கியதோடு, வாழவேண்டிய ஒரு இளம் பெண்ணுக்குக் கணவ னாக இருக்கும் கொடுமைக்கும் ஆளா க்கிவிட்டதே என்று தன்னையே நொந்துகொண்டானே தவிர, பார் வதியை—

ஊஹூம், கிடையாது!

இனி—

ஒருமுறை பார்வதியின் சிறிய தகப்பனார் யாழ்ப்பாணம் வந்திருந் தார். அவர்களுடைய வீட்டுக்கு எல் லோரும் போய் அவர்களைப் பார்த் துத் தெண்டனிட்டு வரவேண்டு மென்றாள் பார்வதி:

அவளுடைய சிறிய தகப்பன் ஒரு பெரிய என்ஜினியர்தான்; மதிப் புள்ள மனிதர்தான். யார் இல்லை என்றது! அவர் என்ன அவர்களு டைய காணியில் ரோட்டுப் போட்டுப் பாலம் கட்டித்தரப் போகிறாரா? இவர் கள் கஷ்டப்படும்பொழுது அவர் வந்து படி அளந்தாரா? அவர் பெரிய

மனிதர் என்ருல் அது அவரோடு. அதுவும்போக இவர்கள் அவருடைய வீட்டுக்குப் போவது அவருக்கு அகௌரவமாக இருக்கலாம்.

இந்த உண்மையை செல்வராசா எடுத்துச் சொன்னபொழுது பார்வதி முதன் முதலாச அவனை எதிர்த்துப் பேசினுள்.

போகட்டும்—

அவளுடைய அண்ணுவின் குழந்தை ஒன்று வாசற்படியில் தவறி விழுந்து பெருவிரலில் சிறுகாயம் ஏற்பட்டுவிட்டது. ஓடிப்போய் வருத்தம் பார்க்கவேணடும் என்ருள் பார்வதி.

அவளுடைய அண்ணுவுக்கு கொழும்பிலும் கண்டியிலும் நாலு பத்துக் கடைகள் உண்டு; லட்சாதிபதிதான். அதற்கென்ன வந்தது? செல்வராசா கிடையாய்க் கிடந்த ஒன்றரை மாதமும் என்ன வாழ்ந்தது?

"வேண்டாம்" என்ருன் செல்வராசா.

பார்வதி அவனுடைய வார்த்தையை ஏற்காததோடு தன்னந்தனியனுக தமையன் வீட்டுக்குப் போய் விட்டு வந்தாள்.

பார்வதிக்கு ஒரு தப்பெண்ணம் உதயமாயிற்று. தனது உறவினர் நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு செல்வராசா பொருமைப்படுவதாகவும் தன்னை அவர்களுடன் சேர விடாமல் வேண்டுமென்றே பிரித்து வைப்பதாகவும் எடைபோட்டுவிட்டாள்.

அதன்மேல் அவளுடைய போக்கில் ஒரு தனி மாற்றம். பேச்சிலே சிடு சிடுப்பு. குணத்திலே கடுகடுப்பு. திட்டம் போட்டுச் செய்வது போல் குத்திப்பேசி கூறுபோட்டு அவனை வேதனைக் கிடங்கில் தள்ளிவிட்டாள்.

'உன் கழுத்தில் தாலியைக் கட்டிய நேரத்துக்கு தலையில் ஒரு கருங் கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் இறங்கியிருக்கலாம்' என்று இன்னெருவனுக இருந்தால் சொல்லியிருப்பான். செல்வராசாவோ, "நான் நல்ல நிலையில் இருந்த காலத்தில் உன்னை உயிருக்கு உயிராக, கண்ணுக்குக் கண்ணுக செல்லமாக வைத்திருந்ததற்கு, நான் விழுந்துவிட்ட இந்த நேரத்தில் நீ செய்யும் பிரதி உபகாரம் இதுதானும்மா?" என்று மனதுக்குள்ளே நெஞ்சுருகக் கேட்டுக் கொண்டான்.

"உனக்கு என்பாலிருந்த அன்பைத் தீய்த்துச் சூனியமாக்கிவிட்டாய். நான் உன்னிடம் கொண்டிருந்த மதிப்பற்ற பிரியத்தைப் பாழ்படுத்திவிட்டாய். இனி இந்தச் சொத்தியினுல் என்ன உபயோகம் என்று எண்ணிவிட்டாயா பார்வதி? எத்தனைதான் இருந்தும் கணவன் மனைவியிடம் அன்பு, நம்பிக்கை, நாணயம் ஆகியன இல்லையென்ருல் அது என்ன இல்லறம்?" என்று செல்வராசா மனம் புழுங்கினுன்.

செல்வராசா அவளிடம் விஷயத்தை விளக்கமாக எடுத்துச் சொன்னுன், தன் போக்கை மாற்றிக் கொள்வாள் என்று! மனப்புயலை வெளியிட்டு நயமாகக் கெஞ்சிக் கேட்டான் மனம் இளகிவிடுவாள் என்று! ஆத்திரப்பட்டவன் போல் அதட்டிப் பேசினுன் பயந்து திருந்திவிடுவாள் என்று!

இல்லை.

இன்னும் ஒன்றை அவன் செய்யவில்லை. அடித்துக் கனிய வைப்பதில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. விட்டுவிட்டான்.

வாழ்வில் தான் ஒரு ஓரத்துக்கு வந்துவிட்டதாகப் பிரமை தட்டியது. இந்நிலையில் அவன் அவளைப் பிரிந்து அகன்று பரந்து விரிந்த உலகத்தில் புகுந்து கலந்து மறைந்துகொள்ள எண்ணியதில் வியப்பென்ன இருக்கிறது?

## கழுதைத்வனி

ஒருவர்:- 'கந்தனும் கழுதையும்' என்ற நாடகத்தில் பின்னனி பாடியிருக்கிறேன்.

மற்றவர்:- சந்தோஷம். கந்தனுக்ககாகப் பாடியவர் யாரோ?

அதற்கு அவன் எதிர்பார்த்த ஐயாயிரம் ரூபாவும் வந்துசேரவேண்டும். அதுவும் வந்துவிட்டால்—வந்துவிட்டால்?

"இன்று தொங்கு சதையாக இறைச்சித் துண்டமாகக் காட்சிதரும் எனது கையில் காயம் ஆறி, மனம் மாறி, உயிர் மிஞ்சி இருந்தால் என்ருவது உன்னைத் தேடி வருவேன், பார்வதி. இல்லையென்ருல்...... இல்லையென்ருல் இல்லைத்தான்" என்று எண்ணிய மாத்திரத்தில் செல்வராசாவின் கண்கள் கலங்கின. திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அவனுடைய திட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் அவனுடைய வாழ்வில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது' ஆண்டவனுகை இருந்தாலென்ன அதற்குமேல் எவராக இருந்தாலென்ன ஒரு மனிதனை எத்தனை காலத்துக்குக் கஷ்டப்படுத்த முடியும்? அதனுல் திடீரென்று ஒருநாள் அவனுடைய கெட்டகாலம் குன்றி நல்ல காலம் விடிந்தது; துன்பம் தொலைந்து இன்பம் வந்தது; விரக்தி மறைந்து விமோசனம் பிறந்தது; அவன் செத்துப்போனுன்......!


## ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்

உரிமையாளர்: சி. ச. கந்தையாபிள்ளை

67/1 காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம்.

எங்களிடம் ஆலயங்களுக்கும் விஷேச வைபவங்களுக்கும் வேண்டிய அபிஷேக வாசனைத் திரவியங்களும் மருந்துச் சரக்கு வகைகளும், சிரம் நேத்திரம் இவைகளுக்கு உகந்த திறமான நேத்திரானந்த, நேத்திர லோக, சந்தனுதித் தைலங்களும், போசனத்திற்கு உபயோகிக்கக்கூடிய திறமான நல்லெண்ணெய் நெய் வகைகளும் சென்ற், அத்தர், பன்னீர் வகைகள், ஆதியாம் வாசனைப் பொருள்களும் வைத்தியர்களுக்கு வேண்டிய சிறந்த சகல விதமான மருந்துச் சரக்கு வகைகளும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**Sri Murugan Medical Store**

67/1 K. K. S. Road, Grand Bazaar,
Jaffna

# வாசகர் போட்டி -2

முதலாவது போட்டியிலும் பார்க்க இரண்டாவது போட்டியில் கலந்து கொண்டவர்கள் தொகை அதிகம் இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலுள்ள சில அன்பர்களும் எழுதியுள்ளார்கள். ஆனால் போட்டியில் பங்குபற்றும் ஆர்வத்தில் போட்டியின் நிபந்தனைகளைக் கவனிக்கத் தவறிவிட்டனர். **சிவாஜி கணேசனை**யும், எம். ஜி. ஆரையும் **ஜெமினி கணேசனை**யும் பற்றி எழுதிவிட வேண்டுமென்ற ஆவலில் நூறு வரிகள்கூட எழுதிவிட்டனர். சிலர். சொல்ல வேண்டியதைப் பத்து வரிக்குள் சொல்லிவிட வேண்டும் என்பதே நமது நிபந்தனை. இந்த நிபந்தனைக்கிணங் காத காரணத்தால் அருமையான பல விமர்சனங்களை நாம் தவிர்த்துள்ளோம்.

பரிசுபெறுபவராகிய **செல்வன் க. கனகசிங்கம் (இணுவில்.)** அவர்கள் எழுதிய விமர்சனத்திலிருந்து சில பகுதியைத் தருகின்றோம்.

**சா**ட்சாத் கட்டப்பொம்மனே வந்து கட்டப்பொம்மன் படத்தைப் பார்த்திருந்தால். நானும் சிவாஜி நடித்துக் காட்டிய கட்டப் பொம்மனைப்போல வாழ்ந்திருக்கலாகாதோ என்று அங்கலாய்ப்பார். கட்டப்பொம்மன் என்றால் கருணை உள்ளம் படைத்த நீதி நியாயம் தெரிந்த மானமே பெரிதென மதித்த ஒரு மறத்தமிழ் வீரன் என்ற எண்ணம் படத்தைப் பார்த்ததுமே ஏற்படுகிறது. இத்தனைக்கும் கட்டப்பொம்மனாகத் தோன்றிய சிவாஜி கணேசன் அள்ளிக் கொடுக்கவில்லை- கொன்று குவிக்கவில்லை. அவருடைய முகத்தில் கணத்துக்குக் கணம் விளையாடும் உணர்ச்சி ஜாலங்கள் இத்தனையையும் கூறின அவர் திரையில் தோன்றினால் அவருடைய தேகத்தில் ஒவ்வொரு நரம்பும் ஒவ்வொரு கதை சொல்லும்.

இத்தனை திறமை வாய்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனே என்னைக்கவர்ந்த நடிகராகும் ஆசிய ஆபிரிக்க நாடுகளால் கெய்ரோவில் நடாத்தப்பட்ட சினிமா விழாவில் முதல் பரிசு பெற்றிருக்கிறார் என்று மட்டும் சொன்னாலே போதும் அதிகம் தேவையில்லை. எந்தப்பாகத்தையும் ஏற்று பாத்திரத்தோடு ஐக்கியப்பட்டு சிறப்பாக நடிக்கும் சிவாஜியின் இத்தனை கால நடிப்பையும் கோபுரம் என்றால் அதற்குச் சிகரம் வைக்க வரத்தான்

போகிறது, பாகப்பிரிவினை. பார்க்கத்தான் போகிறோம், பொறுத்திருந்து.

க. கனகசிங்கம்

**வாசகர் போட்டி: 3 - பரிசு: ரூபா 10**

## என்னைக் கவர்ந்த நடிகை

சென்ற ஆண்டில் உங்களைக் கவர்ந்த நடிகையைப் பற்றி 100 சொற்களுக்குள் எழுதிக் கீழ்க்கண்ட முகவரியை வெட்டி ஒட்டி 10-5-60 க்குள் அனுப்புக.

**வாசகர் போட்டி:- 3**
மே/பா கலைச்செல்வி
கந்தரோடை :: சுன்னுகம்.


**கமக்காரர்களுக்குத் தேவையான திறமான**

## புகையிலை உரம்

மற்றும் காங்கேசன் சீமேந்து, சாய்ப்புச் சாமான்கள், பலசரக்கு வகைகள் முதலியவற்றிற்கு எம்மிடம் வாருங்கள்.

குறைந்த விலை : சிறந்த பொருட்கள்
நேர்மை, நம்பிக்கை, நிதானம்
ஆகியவையே எமது இலட்சியம்

## ஆ. மு. சுப்பிரமணியம் அன் பிரதர்ஸ்

காங்கேசன்துறை வீதி, :: சுன்னுகம்.

# அன்புடையீர்!

எங்களிடம் தமிழ் நாட்டில் வெளியாகும் சகல விதமான புத்தகங்களும் பத்திரிகைகளும் மேல் நாட்டு அறிஞர்கள் வகுத்த மெய்ஞான நூல்களும். தமிழ் அறிஞர்களின் தரம் உயர்ந்த நாவல்களும்—திருமணப்பரிசு நூல்களும் சினிமா நடிகர்கள்—அரசியல் தலைவர்களின் படங்களும்—திருமண வாழ்த்திதழ்களும் — சினிமா பாடல் கதைவசனம் யாவும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| தினமணி | முரசொலி | திராவிடன் | கலைக்கதிர் |
| நம்நாடு | தென்றல் | தென்னகம் | முத்தாரம் |
| ஜனசக்தி | திராவிடநாடு | HOME LAND | சினிமாகதிர் |
| தமிழ் நாடு | மாலைமணி | மன்றம் | நக்கீரன் |
| தென்றல்திரை | இனமுழக்கம் | திரைக்கலை | அண்ணா |
| நடிகன் குரல் | இந்து நேசன் | அமிர்தம் | தங்கத்திரை |
| | சிறுவர் சினிமா | கலைச்செல்வி. | |

மேற்காணும் பத்திரிகைகளுக்கு (கொழும்பு நகர் தவிர) ஏனைய இலங்கை முழுவதற்கும் ஏஜண்டாய் இருக்கிறோம். மற்றும் பேசும்படம்—கலை—விகடன்—உமா—காதல்—தமிழ் சினிமா—இன்னும் பல பத்திரிகைகளுக்கு யாழ்ப்பாண ஏஜண்டாய் இருக்கிறோம்.

## ▣ றப்பர் ஸ்டாம்புகள் ▣

சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள்.

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் உண்டு

# தமிழ்ப்பண்ணை

193. K. K. S. ரோட் : யாழ்ப்பாணம்.

# ஞானத்தின் திருவுரு

—சோ. பரமசாமி—

செந்தமிழ்ச்செம்மலான சேக்கிழார் ஆக்கிய **திருத்தொண்டர் புராணம்** செந்தமிழ் செழிப்பதற்கும், சைவம் தழைப்பதற்கும் நல்லதொரு பெருஞ் செல்வம். அதனுல் அநபாய சோழன் என்ற மகாராசா அப் புலவர் பெருந்தகையைத் தமது மந்திரியெனவும் எண்ணுது, அவரது புனிதத் தொண்டை வியந்து அவரையும், அவர் யாத்த நூலையும் பெருமைப்படுத்தித் திரு உலா எடுத்தான்.

ஒரு நாள் சிதம்பரத்தையடுத்த வீதிகளை யெல்லாம் அலங்கரிக்கும் படி ஆணையிட்டான். வேதியர்கள் வேதம் ஓதினர். அடியார்கள் அருட்பாடல்களை அள்ளிச் சொரிந்தனர். தில்லை வாழந்தணர்கள் வீதிகளை அலங்கரித்தனர். பூரண கும்பங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கி, திருவிளக்கேற்றி வைத்திருந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி மங்கல இசைக் கருவிகளின் ஒலி வானைப் பிளந்து இன்பத்தை அள்ளி வீசியது. இத்தகைய ஆரவாரங்களைக் கேட்ட மக்கள் ஓடோடியும் வந்து புதுமை பார்த்தனர்.

என்ன அதிசயம்! அருண்மொழித் தேவர் என்ற பிள்ளைத் திருநாமமுடைய சேக்கிழார் பெருமான் யானை மீது இருக்கிறுர். சோழமகாராசா தாமுங்கூட இருந்து தமது இரண்டு கைகளாலும் கவரி வீசி மகிழ்ச்சிக்கடலில் மிதக்கிறுன். நற்றமிழுக்காக நன்றி பாராட்டி உள்ளங்களிக்கும் மன்னனைக் கண்டு "தமிழ்நாடு உயர்ந்தது சைவம் வளர்ந்தது" எனப் போற்றினர் புதுமை பார்ப்போர்.

சேக்கிழாரின் செந்தமிழ்ப் பூங்காவில் மலர்ந்த செய்யுட்கள் கவிதை நயம் மிகுந்தன. இன்பத் தமிழின் இலக்கியமாய் விளங்கும் இவரது நூலில் அமங்கலமான சொற்களை எங்

---

**அகில உலகத் தமிழ் மறைக் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர் சோ. பரமசாமி சமய நூல்களிலும் இலக்கியங்களிலும் பரிச்சயமுடையவர். இப்பொழுது சென்னையில் கல்வி பயிலும் இவ்விளைஞரின் சொந்த ஊர் யாழ்ப்பாணம், இணுவில்.**

---

குமே காணமுடியாது. புராணம் என்றால் புளுகு என்று சொல்லும் இக்காலத்தில் அப்பெருந்தகையார் செய்த இலக்கியச் சேவையையும், சைவ சமயப்பேருண்மைகளைவிளக்கும் முறைமையினையும் "வாழுநாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாழுமிவ்வுடல் கொண்டு மீளேன்" என்ற உயரிய குறிக்கோளையும், "ஈனர்கட்கு எளியேனல்லேன்" என்னும் இறுமாப்பினையும் கூறும் வரலாறுகளை நவில் தொறும நூல் நயம் வளரும் பயில் தொறும் இன்பம் பெருகும். இதனாற்போலும் இந்நூலைப் பெட்டியிலேவைத்துப் பூசிப்பவர்களை இன்றும் காணலாம்.

"அறங்குன்றி மறந்தலையெடுத்த ஞான்று, பூமியிலே தோன்றி நெறியல்லா நெறிச் செல்லும் மக்களை நெறிப்படுத்துவேன்." என்று கீதையிலே பகவான் அருச்சுனனுக்குக்கூறுகிறார். அதேபோல கச்சியப்பசிவாச்சாரியார் அசுரர்களின் அநீதியை அடக்குவதற்காக முருகப் பெருமான் திரு அவதாரம் செய்ததைக் கூறுகிற பொழுது "உதித்தன உலகமுய்ய" என்கிறார் சேக்கிழாரோ "புனித வாய் மலர்ந்தழுத......ஞானசம்பந்தன்"என்று ஞானசம் பந்தருடைய வரலாற்றைச் சொல்லத் தொடங்கிறார்.

சம்பந்தர் எதற்காக அழுதார்? பசியினால் அழுதாரா? அன்றிப் பயத்தினால் அழுதாரா? பின்னை எதற்காக அழுதார் என்ற வினாக்களை அவர் முன் படைத்தால் உடனேயும் விடையிறுத்து விடுவார்.

ஞானசம்பந்தர் வேறு எதற்காகவும்அழவில்லை,உலகம் வாழ வேண்டுமென்றே அழுதார், உலகம் வாழ்வதற்கு அழுதாற் போதுமா? ஆக்க வேலைகளன்றோ செய்ய வேண்டும். ஆக்கவேலைகள் செய்வது இழிநிலைக் கன்றோ? ஆம். சமண சமயமே மெய்ச்சமயமென்று பறைசாற்றிய காலத்தில், "மன்னனைத் திருப்புதல் மக்களைத் திருப்புவதற்குச் சரியென" எண்ணிச் சமயப் புரட்சி செய்த நேரத்தில் வேத நெறி தழைக்கவும், சைவமரபு சுடர் விட்டொளிரவும், குருபரம் பரை பொலியவும் தமது புனிதமான வாய்திறந்து பொருமி அழுதார் என்று சமாதானஞ் சொல்கிறார்.

கள்ளத் தலைவர் துயர்கருதி
தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக"

என்பது உமாபதி சிவத்தின் கூற்றன்றோ.

குழந்தைகள் அழுவதை யாராவது அவதானித் திருக்கிறீர்களா? கைகளை அடித்து கால்களை வீசி, நிலத்திலேயே வீழ்ந்து—புரண்டு அழுவார்கள். இளங்கன்றாகிய ஆளுடைய பிள்ளை (ஞானசம்பந்தர்) எவ்

வாறு அழுதது என்பதைப் பார்ப்போம்.

"கண் மலர்கள் நீர்ததும்பக்
கைம் மலர்களாற் பிசைந்து
வண்மலர்ச் செங்கனிவாய்
மணி அதரம் புடைதுடிப்ப
எண்ணில் மறை ஒலிபெருக
எவ்வுயிருங் குதுகலிப்ப
புண்ணியக்கன் றனையவர்தாம்
பொருமி அழுதருளினார்."

என்று சேக்கிழார் சொல்லும் கவிதை நயம் சொலச் சொல்லத் தித்திக்கும்.

தமிழ்நாட்டைக் கூன்பாண்டியன் ஆசாண்டு வந்த காலத்தில் பரசமயமாகிய இருள் சூழ்ந்திருந்தது. உண்மைச் சமயம் இதுவென உணரமுடியாது மக்கள் திணறிய நேரத்தில் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லா தவரான ஆண்டவனை முழுமுதற் கடவுளெனக் கூறும் சைவ சமயம் சிறிது மந்தநிலையடைந்து இருந்தது.

சைவம் என்றால் சிவ சம்பந்தமுடையது என்பது அறிஞர் கருத்தாகும். சைவம்வேதத்தோடு சம்பந்தப்பட்டது. வேதம் என்பது 'வித்' என்பதின் வினையடியாகப் பிறந்தது! வித்து என்பதன் பொருள் அறிவு. வேதத்தோடு சம்பந்தப்பட்டது வைதிகம். ஆகவே சைவத்திற்கு வைதிக சைவம் என்ற சிறப்புப் பெயருமுண்டு. "......மௌனமோலி அயர்வுறச் சென்னியில் வைத்து இராசாங்கத்தில் வளர்ந்தது வைதிக சமயம்" என்று விதந்துள்ளார் சமரசசீலராகிய தாயுமானவர்..

இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவசமயம் மந்தநிலையடைந்ததே என்று பாண்டி நாட்டில் இரு உள்ளங்கள் வருந்தின. ஒன்று பாண்டிமாதேவி. மற்றது மந்திரியாகிய குலச்சிறையார். இவ்விருவரும் உண்மைச் சமயத்தை நிலைநாட்டி, மக்களை நன்னெறிப் படுத்த வேண்டுமெனத் தம்மனதிலுள்ளே இடையறாது வணங்கிவந்தனர்.

தோணிபுரத்தில் ஒரு நாள் ஆளுடைய பிள்ளையார் "தம் மேலைச்சார்புணர்ந்தோ? சாரும் பிள்ளைமைதானோ?" திருத்தோணிச் சிகரம் பார்த்து அழுதார். அந்த ஒலிகேட்டுத் தாயினும் நல்ல தலைவராய சிவபெருமான் உமாதேவியாருடன் ஆளுடைய பிள்ளையார்முன் தோன்றினார். பிள்ளையின் நிலைகண்டு இரங்கிய உமையம்மையார் துணை முலைகள் பொழிகின்ற திரு முலைப்பாலை, எண்ணரிய சிவ ஞானத்தின் அமுதங் குழைத்து அவருக்கு அருளினார். அதனால் ஆளுடையபிள்ளையார் சிவஞான சம்பந்தராகிவிட்டார். ஞானம் என்பது அறிவு. கலையறிவு மெய்யறிவு யாவும் உணர்ந்து அறிவே வடிவாகிவிட்டார் சம்பந்தர். ஞானத்தின் திருவுரு என அவரை நானிலம் புகழ்ந்தது.

ஓதாது உணர்ந்த ஒப்பரிய ஞானத்தால் பத்திச்சுவை சொட்டுந் தீந்தமிழ்த் தேவா

ரங்களைப் பாடத் தொடங்கினர். இவரது பாடல்கள் இசையோடு சம்பந்தப்பட்டன. தாள அமைதி பெற்றன. அதனாலன்றோ அவருக்கு இறைவனால் பொற்றாளங் கொடுக்கப்பட்டது. ஞானசம்பந்தரின் மெல்லிய பாதங்கள் நோவுறாது முத்துச் சிவிகையும் கொடுக்கப்பட்டது. இவ்வாறு இறைவனாலே ஆட்கொள்ளப்பட்டு உண்மை நெறியைப் புகட்டிவரும் ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்றனர் பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும்.

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தரின் தமிழ் படிக்கும்பொழுது ஒரு துணிவு பிறக்கும், அவருடைய பாடல்கள் மிகவும் சக்தி வாய்ந்தன. ஞானசம்பந்தர் அப்பர் சுவாமிகளிடம் அதிக அன்பு பூண்டவர். இவர்கள் இருவரும் ஒருநாள் வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கச் சென்றனர். அங்கே திருக்கதவு திறக்கப்படாமல் இருப்பதைக் கண்டனர். அக்கதவினைத் திறந்து அதன்வழியே சென்று சுவாமியை வணங்கவேண்டுமென்று விரும்பினர் சம்பந்தர். அதனால் அப்பர் சுவாமிகளை நோக்கி, கதவு திறக்கும் பொருட்டுத் திருப்பதிகம் பாடும்படி பணித்தார். பதிகங்கள் ஒன்று இரண்டு எனப் போய்க்கொண்டிருந்தன. கதவு திறக்கப்படாமல் தாழ்ந்தது. திருக்கடைக்காப்பிலே "இரக்கமொன்றிலீர்" என்று பாடியதும் கதவு திறக்கப்பட்டு அடியார்கள் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்தார்கள். பின்பு திறந்த கதவினை அடைக்கும் திருப்பணியை ஞானசம்பந்தர் ஏற்றார். "சதுரம் மறை நான்கு" என்று முதலாவது பதிகத்தைப் பாடத்தொடங்கியதுமே கதவு அடைபட்டது.

அப்பர் சுவாமிகளின் கவிதையின் திறனாலன்றோ இறைவன் "திருநாவுக்கரசு" என்ற பெயர் கொடுத்தார். அத்தகைய நாவுக்கரசரே வியக்கக்கூடியதான திருவருட்பேறு பெற்றவர் ஞானசம்பந்தர்.

ஞானசம்பந்தர் வேதாரணியத்தில் இருக்கும் செய்தியை அறிந்தார்கள் பாண்டிமாதேவியாகிய மங்கையற்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும். தூதுவர்களை அனுப்பி ஞானசம்பந்தரை ஞாலம் உய்வதற்காகப் பாண்டிநாட்டிற்கு அழைத்து வரவேண்டுமென்று விரும்பினர்கள். தூதுவர்கள் சென்று தமது வரவைப் பிள்ளையாருக்குக் கூறினர். அக்காலத்தில் பிள்ளையாருக்கு நாள்களும், கோள்களும் வலியில்லாதிருந்தன. ஆயினும் "ஆசறு நல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே" என்று கூறிக் கொண்டு பாண்டிநாட்டுக்குச் சென்றார்.

பரசமய கோளரியாகிய ஞானசம்பந்தர் பாண்டிநாடு வந்த செய்தியறிந்த சமணர்கள் ஆத்திரங்கொண்டார்கள். அபசகுனம் கண்டு அலமந்தார்கள். அவரிருந்த திருமடத்திற்குத் தீயும் வைத்தார்கள். "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்" "பொறுத் திருப்போம் காலம் மாறும்" எனப் பேசாதிருந்தார்.

பந்து ஒன்றைச் சுவருக்கு எறிந்தால் மீண்டும் எறிந்தவரிடம் வந்து சேரும். அதுபோல பிறருக்கு ஒருவர் தீவினை விழைத்தால் அத்தீவினை அவரிடமே வந்து சரணாகதி அடையும். ஞானசம்பந்தர் இருந்த மடத்திற்கு வைத்த தீ பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயாக வந்து சேர்ந்தது. பாண்டியன் நோயின் கொடுமை பொறுக்கமுடியாது வருந்தினன். அந்நோயைச் சமணர்களாற் தீர்க்கமுடியாது கண்களை விழித்தனர். அவர்கள் நிலை பெரிதும் பரிதாபம்!!

பாண்டியனை வருத்தும் வெப்பு நோயைத் தீர்க்கக்கூடியவர் ஞான சம்பந்தரே என உணர்ந்த மங்கை யர்க்கரசியாரும் குலச்சிறை நாயனுரும் ஞானசம்பந்தரை அவ்விடம் அழைத்துவர அரசனிடம் அனுமதி கோரினுர்கள். அரசன் சம்பந்தரை அழைத்து வருவதற்குச் சம்மதித் தான். பாண்டிமாதேவிக்கும் மந்திரி யாருக்கும் உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தூதுவர்கள் சென்று சம்பந்தப் பெருமானை அரண்மனைக்குஅழைத்து வருகிறுர்கள். எங்கும் குதூகலம்; ஆரவாரம்; ஆனந்தக்கூத்து.

ஞானம் உண்டஞான போனக ரான ஞானமணி விளக்கு எழுந்து வருவதைக் கண்டார்கள் பாண்டிமா தேவியாரும் குலச்சிறையாரும். அவர் கள் ஆளுடைய பிள்ளையாரைக் காண வில்லை. சிவபாதவிருதயரின் திருக் குமாரரைக் காணவில்லை. அறிவே உருக் கொண்ட அருட்செல்வமான ''ஞானத்தின் திருவுருவைக்'' கண் டார்கள்.

பிறமதத்தவர்களுடைய வஞ்சனை யால் வைதிக மார்க்கம் தலையெடுக்க முடியாது கஷ்டப்பட்டது. அக்காலத் திலே தோன்றிய ஞானசம்பந்தர் ''ஆரியத்தோடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா ஈனர் கட்கெளியேனல் லேன்'' என்று அவர்களுடைய கொட் டம் அடக்கி ''வாழ்க அந்தணர்'' என வாழ்த் தெடுத்தார். அந்தணர்கள் வாழ்ந்தாற்ருன் ஏனைய உயிரினமும் வாழ முடியும். அந்தணர்—அழகிய தண்ணளி உடையவர். ''அந்தணர் என்போர் அறவோர்'' என்பது பொய்யா மொழி. இவர்பாடிய பாடல் களின் பொருளை விளக்குமுகமாகச் சேக்கிழார் கூறுந் திறன் நான்கு வேதங்களும் வாழ்வதற்கு ஞானசம் பந்தரின் தமிழ் வேதம் (தேவாரம்) எத்துணைப்பயனுடையது என்பதை அறியலாம். அதனுற்போலும் ஞான சம்பந்தரை ''நான் மறையின் தனித்துணை''யோ இவரெனத்திகைத் தார்கள்.

இவர் தானு ஞானசம்பந்நர் என்று கிட்ட அணுகினுர்கள். தண் ணென்ற ஒளிப்பிளம்பு வருவதைப் பார்த்தார்கள். விண்ணிலே தோன்றும் சந்திரன் தான் மண்ணிலே வருகிருனே என்று விண்ணையும் மண்ணையும் நோக்கி ஞர்கள். விண்ணிலே மட்டுமல்ல, மண்ணிலேயும் மதி (சந்திரன்) இருக் கிறது. ''வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்து'' வருவதைக் கண்டார்கள். வானத்தில் தோன்றும் சந்திரனுக்கு வளர்ச்சி பதினுறு தினங்கள் எடுக்கும். அவ் வாறே ஞானசம்பந்தரும் பதினுருட் டைப் பராயத்தில் அருட்சோதியிற் கலந்தார் என்பது நோக்கத்தக்கது.

சம்பந்தரின் செய்யுட்கள் இசை யமைதி பெற்றன. இசையைப் பற் றிய வரலாறுகளைச் சங்கநூல்களுள் ஒன்ருன பெருங்கதையில், இசையி ஞல் மதமடங்கிப் பணிசெய்த யானை யின் செய்தி ஒன்று வருகின்றது. பெரிய புராணத்தில் ஆனய நாயனுர் சரித்திரத்திலும் அதன் திறன்பேசப் பட்டிருக்கிறது. இசை எழுவகைப் படும் என்பர் இசைநூலார். அவை: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இசை யின் மூலாதாரமாய் உள்ளவை சரி, கம, பத, நி என்னும் ஏழு ஸ்வரங் களுமாம். ஏழு இசையும் பிறப்ப தற்கு சம்பந்தர் ஓர் உரு எடுத்திருக் கின்ருரோ என்று எண்ணும்படியான தன்மையினை உடையவர். ஞானசம் பந்தரோடு பலகாற் திரிந்தும், அவ ரது இசை வன்மையை உணரமுடி யாத திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம்முள்ளே சிறிது இறுமாப்புற்ருர். இதனை உணர்ந்த சம்பந்தர் இசை யின் பெருமையை உணர்த்த விரும்பி ''மாதர்மடப் பிடியும்'' எனத்தொடங் கும் பாடலைப் பாடினுர். அப்பாடல் பாணனரின் இசைக்கருவியில் அடங் கப் பெருமையால் அவர் மனம் மிக

நொந்து இசைக்கருவியைக் கல்லிலே மோதி உடைக்கத் துணிந்தார். அப்பொழுது பாணருக்கு இசையின் செம்மையை விளக்கி, இசைக்கருவியை உடைக்காது தடுத்து இசைக்கலை வாழட்டும் என எண்ணிய "கானத்தின் எழுபிறப்பைக்" கண்டார்கள்.

தூரத்தே ஞானத்தின் திருவுருவாகக் கண்டவர்கள், நெருங்கியதும் இளமதியோ என வியந்து, அவர் ஆசிமொழிகேட்டு கானத்தின் எழுபிறப்பு எனப் போற்றி அவர்களது உள்ளம் மட்டுமன்றி கண்களும் களித்தன என்பதை "கண்களிக்கக் கண்டார்கள்" என்பதில் எவ்வளவு அழகு, எவ்வளவு சுவை சொட்டுகின்றது. இதனைச் சேக்கிழார் வாயிலாகப் படித்துப் பாருங்கள்.

"ஞானத்தின் திருவுருவை நான்
[மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்
[ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
[செஞ்சடையார் சீர்பரவும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்
[களிப்பக் கண்டார்கள்.

என்பதில் எத்தகைய கவிதை நயம் சுரக்கின்றது என்பதை இசையோடு உரக்கப் பாடினல் நன்கு உணரலாம்.

ஞானசம்பந்தர் முருகக்கடவுளின் மறுபிறப்பு என்பர் கற்றறிந்தோர். "என்றும் இளையாய் அழகியாய்" என்று போற்றப்படுபவர் முருகன். ஞானசம்பந்தரும் அழகிற் சிறந்தவர்; ஆண்டில் இளையவர்; உருவிற் சிறியவர்; அறிவில் உயர்ந்தவர்; அறநெறியில் மேம்பட்டவர். இவர் பாண்டியன் அரண்மனைக்குப் புண்ணியத்தின் படையெழுச்சிபோற் சென்றணைந்தார், அங்கு நோய்வாயுற்றிருந்த நற்றமிழ் வேந்தனைக் காப்பாற்றித் திருநீற்றின் பெருமையினை விளங்கச் செய்தார். நிலையிலா சமணர்கள் பல்வேறு வகையான செயல்களின் மூலம் தமது சமயமே உண்மைச் சமயமெனத் தாபிக்க விரும்பிப் படுதோல்வியுற்றனர். ஈற்றில் ஞானசம்பந்தரே வெற்றிபெற்ருர். அவரது கவிதைகள் இனிமை நிறைந்தன; இன்பம் பயப்பன; உண்மை உரைப்பன; நீதி கூறுவன. படியுங்கள்.

"செல்வ ஞானசம்பந்தன் செந்
[தமிழ்
செல்வ மாமிவை செப்பவே."

# அட்டைப் படம்

உ

கலைச்செல்வி வாழ்த்து

அகல்விசும் புள்ளாடும் அவனியும் புகழ்கின்ற,
அமுதமே வருக வருக
திகழ்வுதரு முச்சங்கச் செந்தமிழ்த் தீம்சுவைத்
தேன் பொழியும் முகிலே வருக
இகபர சுகம்பேசு மிலக்கியப் பாகூட்டும்
எமதன்னை வருக வருக
சகலகலைச் செல்வியெனத் தண்பெயர் புனைந்துமிளிர்
சஞ்சீவியே வருகவே.

என்று நமது கவிஞர் சஞ்சீவி அவர்கள் பாடுவதைப்போல், அகமும் முகமும் மலர, கை கூப்பிக் கனிவுடன் வரவேற்கின்ருள் இக் கன்கன்னிப் பெண். இப்புதிய ஆண்டில் நல்லதோர் இலக்கிய விருந்தை நாட்டிற்கு அளிக்க வேண்டும் என்று அவள் விரும்புவதைப் போலவே நாமும் விரும்புகின்றோம்.

# அறிவு வளர்ச்சிப் போட்டி-இல. 1

முதற் பரிசு: ரூபா 15 —— இரண்டாவது பரிசு: ரூபா 10

பிரவேசக் கட்டணம் இல்லை.

1. போட்டிக் கூப்பனும் குறிப்புக்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. "கலைச்செல்வி"யிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கூப்பன்களிலேயே விடைகளை நிரப்பி உங்கள் பெயரைத் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். ஒருவரே பல கூப்பன்களில் விடையை அனுப்பலாம்.

2. போட்டி ஆசிரியரின் எழுத்துக் கெழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதலாவது பரிசும், அடுத்து ஆகக் குறைந்த பிழைகளுடன் அனுப்பியவருக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும்.

3. ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை அனுப்பியிருப்பின் **திருவுளச் சீட்டுப்படி** பரிசுகள் அளிக்கப்படும்.

4. யாருமே சரியானவிடை அனுப்பாதிருந்தால், ஆகக்குறைந்த பிழைகளுடன் அனுப்பியோருக்குப் பரிசுகள் கொடுக்கப்படும்.

5. கலைச்செல்வி அலுவலகம், கலாதேவி அச்சகம் ஆகியவற்றைச் சேர்ந்த எவரும் இப் போட்டியிற் பங்குபெற அனுமதிக்கப்படார்.

6. போட்டியின் முடிவு திகதி 20-5-1960

7. ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால், அவற்றில் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

அறிவு வளர்ச்சிப் போட்டி:-
கலைச்செல்வி
சுன்னாகம்



## குறிப்புகள்

### இடமிருந்து வலம்

1. உலகம்.

3. எதையும் இப்படிச் சொல்வது கூடாது.

4. சில சேலைகளின் இது நன்ருக இருக்கும்.

5. சரிப்படுத்திஞல் இவை வாகனமில்லாமலே பறக்கும்.

9. துயில் மாறியிருக்கின்றது.

11. இதற்காகவே சிலர் கல்யாணம் செய்துகொள்கிருர்கள்.

12. ஆறுவது.........

13.

### மேலிருந்து கீழ்

1. நாடு வீடு அற்றவன்.

2. பாடசாலைகளில் ஓவியம் கற் கற்பித்தலை இப்படிச் சொல்வார்கள்.

3. ஓடம் செல்வதற்கு இன்றியமையாதது.

6. கயிறு அறுந்து விட்டது.

7. கீழிருந்து மேலாக வாசித்தால் வீடுகளிலுள்ள இதைக் காணலாம்.

8. ஒரு வகை மருந்துச்சரக்கு.

10. இதற்குப் பயப்படுபவர்களும் உண்டு.

# PRAGAS STORES

## எம்மிடம்

காலத்திற்கேற்ற பலவர்ணங்களிலும் கவர்ச்சிகரம் வாய்ந்த நிறங்களிலும்

## ஆண் பெண் குழந்தை

ஆகியோர்களுக்கு

சப்பாத்து வகைகளும் ❁ சாண்டல் வகைகளும்

பெற்றுக்கொள்ளலாம்.

**33, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.**

## அழகுறும் அச்சுவேலைகளா?

அதை எம்மிடம் அனுப்பி வையுங்கள்

சிறந்த முறையில் செய்து தருவோம்.

**ஸ்தாபிதம் 1940**

## ஸ்ரீ தையல்நாயகி அச்சகம்

**322, காங்கேசன்துறை வீதி,**

**யாழ்ப்பாணம்.**




உ

போன் 506 தந்தி "வணக்கம்"

**உயர்ந்தரகம் நிதானவிலை**

இன்றல்ல நேற்றல்ல பல்லாண்டுகாலம் பலராலும் போற்றிப் புகழப்பட்ட புடவை மாளிகை

கூறைகள் பட்டுகள் பருத்திப்புடவைகள் சுத்தகதர்கள் D. M. M. பாரிசாத ஊதுபத்திகள் கோவில் பட்டுக்குடைகள் விலை சகாயமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

# ஆ. அப்பையா அன் கோ

பாட்டினர்:- ஆ. அப்பையா
செ. காசிப்பிள்ளை

**82- காங்கேசன்துறை றேட்**
**யாழ்ப்பாணம்.**

டெலிபோன் நம்பர். 671 டெலிகிராம் : பேல்ஸ்

# உமர்பிரதர்ஸ்

எங்களிடம் உயர்ந்த ரக O. B. மார்க் ஸ்பிரிட்டும் பள்ளிக்கூட உபகரணங்களும் எனுமல் கிளாஸ் சாய்ப்பு சாமான்கள் மற்றும் இதர சாமான்களும் நிதானமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களைத் திருப்தி செய்வதே எங்கள் நோக்கம்,

# உமர்பிரதர்ஸ்

**44, பெரிய கடை யாழ்ப்பாணம்.**

# "போட்டோ" கலை உலகில்

## ஓர் அற்புதம்

என்றும் மறக்கமுடியாத வைபவங்களில்,

உங்கள் உருவங்களை
இயற்கை வர்ணங்களில்

உருவாக்கித்தருகிறோம்

வடமாகாணத்தில்

சுன்னுகம் **பிறின்ஸ்** ஸ்தாபனத்தாரால்

மட்டுமே இந்தக்கலை உருவாக்கப்படுகிறது

## Kodak - Extachrome

கொடாக்-எக்ராகுரோம்
டெக்னிக் கலர் !!!

நினைவிருக்கட்டும்

சுன்னுகம் பிறின்ஸ்



யாழ்-தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, சு. இராசநாயகம், B. A. அவர்களால் சுன்னுகம், கலாதேவி அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டது. நிர்வாக ஆசிரியர்: சி. சரவணபவன், B. A.

ஜொலிக்கும் வைரங்கள்

அழகிற் சிறந்த ஆபரணங்கள்

இவைகட்கு எம்மிடம் வாருங்கள்!

நவநாகரிக டிசைன்களில்

நகைகள் குறித்த காலத்தில்

ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்

# பிரகாசா ஆபரண மாளிகை,

Prop: S. ஞானப்பிரகாசம்

83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இன்றே வாருங்கள்

# இன்ப நிலையத்திற்கு

- சுவையான சிற்றுண்டிகள், காப்பி, தேநீர் குளிர்பான வகைகள்.
- சுத்தமான திறம் நல்லெண்ணெய்
- ருசிகரமான ஊறுகாய் வகைகள்.
- ஆனந்தவிகடன், கலைச்செல்வி, ஈழநாடு, பேசும்படம் கதம்பம், இன்ப இரகசியம், கலை, இந்துநேசன், கங்கை.
- ஏராளமான துப்பறியும் நாவல்கள், மலிவுப்பதிப்புகள்.

# இன்ப நிலையம்

ஸ்டேசன் வீதி, : : சுன்னாகம்.

Registered at the G. P. O. as a News paper KALAICHELVI

# கலைச்செல்வி

மலர்: 2 இதழ்: 4

## உள்ளே ! ......


| | |
|---|---|
| உனக்காக கண்ணே! | சிற்பி |
| பட்! பட்!! (கேள்வி பதில்) | தாண்டவக்கோன் |
| சிறை | தீவான் |
| பல கோடி | ச. வே. பஞ்சாட்சரம் |
| எழுத்துலகில் நான் | கனக செந்திநாதன் |
| வஞ்சம் | இலங்கையர் கோன் |
| விமோசனம் | உதயணன் |
| ஞானத்தின் திருவுரு | சோ. பரமசாமி |
| எனக்குப் பிடித்த நடிகை | போட்டி முடிவு |


## அறிவு வளர்ச்சிப் போட்டி - 1

பரிசு: ரூபா 25

பிரவேசக் கட்டணம் இல்லை.